gistered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II+16 பக்க விசேட இணைப்பு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 19 (01.01.2005) சனிக்கிழமை இதழ்:93

## ழுதடைந்த அரிசியை கொண்டுசென்று பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டம்!



(பருத்தித்துறை)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அரிசி பாவனைக்குதவாததாக இருந்ததால் ஆத்திரம்கொண்ட மக்கள் தரமற்ற அரிசியுடன் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பச்சை அரிசி மிக மோசமாகப் பழுதடைந்து மண்கட்டிகளுடன் துர்நாற்றம் வீசும் நிலையில் காணப்பட்டது.

தொம்மையப்பர் கோவிலடி, சூசைப் பிள்ளையார் கோவிலடி, லூர்து மாதா கோவிலடி, கற்கோவளம் பாடசாலை, பொலிகண்டி பாலாவி பாடசாலை ஆகிய நலன்புரி நிலையங்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் இந்த அரிசி விநியோகிக்கப்பட்டிருந்தது.

இதனால் ஆத்திரம்கொண்ட பொதுமக்கள் பழுதடைந்த அரிசி மூடைகளை வாகனங்களில் ஏற்றிவந்து பிரதேச செயலகத்துக்கு (12 ஆம பக்கம் பார்க்க)

## கிழக்கில் கடும் மழை; பொதுமக்கள் பதற்றம்!

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் அடைமழை பெய்யத் தொடங்கியுள்ளதால், நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு திருகோணமலை (12 ஆம பக்கம் பார்க்க)

நாளை கலண்டர்

நமது ஈழநாடு நாளைய இதழுடன் அழகிய நான்கு வர்ண கலண்டர் இலவச இணைப்பாக வெளிவரும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

## வெளிநாட்டில் நிதியுதவிகளைப் பெறுவதற்காக

# வசரமாக மீள்கட்டுமானப் பணிகளை ரம்பிக்க ஜனாதிபதி சந்திரிகா திட்டம்!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் கட்டுமானம் செய்வதற்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி தேவைப்படுவதாக மதிப்பிட்டுள்ள அரசாங்கம் –

எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தப் பணிகளை ஆரம்பித்து வெளிநாடுகளிடமிருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கவுள்ளது.

போரால் சீரழிந்த பிரதேசங்களைப் புனரமைக்க ரோக்கியோ மாநாட்டில் ஒதுக்கிய நிதியைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொண்ட அரசு சுனாமி அனர்த்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி வெளிநாடுகளிடம் நிதியுதவிகளைப் பெறும் நடவடிக்கையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மியில் காயமுற்ற ர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

அனர்த்தத்தால் காயமடைந்து கிச்சைக்காக யாழ். போதனா லையில் அனுமதிக்கப்பட்ட ண்கள் நேற்று பரிதாபகரமாக னர்.

யைச் சேர்ந்த 39 வயதான ல்லைத்தீவைச் சேர்ந்த 50 .வசந்தாதேவி ஆகிய இரு மரணமடைந்தவர்களாவர்.

கை அனர்த்தத்தால் காயமடைந்து ஆம் திகதி மேலதிக சிகிச்சைக் ்.போதனா வைத்தியசாலைக்கு 2 ஆம பக்கம் பார்க்க)

## மேலும் 3 போர்க்கப்பல்கள் இந்தியாவிலிருந்து வந்தன!

(புதுடெல்கி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு உதவுவதற்காக இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று நேற்றுக் கொழும்பு வந்தது, இதே வேளை மேலும் இரு போர்க்கப்பல்கள் கொச்சின் துறைமுகத்திலிருந்து புறப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட அனர்த்தத்தை அடுத்து இந்தியா 4 போர்க்கப்பல்களை நிவாரணப் பணிகளுக்காக அனுப்பியிருந்தது.

இவற்றுள் ஐ.என்எவ் சந்தாயக், ஐ.என்எஸ். (12 ஆம் பக்கம் பார்க்க)

## னாமி கடற்கொந்தளிப்பால் ரும் பாதிப்பு ஏதுமில்லை!

### ற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை

(கிளிநொச்சி)

ி கடற்கொந்தளிப்பால் கடற்புலி பேரழிவு ஏற்பட்டிருப்பதாக அரச ராணுவத் தரப்பும் பிரசாரம் செய்து போதும் - அவ்வாறு பெரிய இழப் துவும் தமக்கு ஏற்படவில்லை என ின் சிறப்புத் தளபதி கேணல் வித்துள்ளார்.

வானொலி மற்றும் தொலைக் அளித்த பேட்டியிலேயே அவர் ிப்பிட்டார்.

இதில் அவர் மேலும் குறிப்பிடுகையில் - கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற கடற்கொந்தளிப்பால் விடுதலைப் புலிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கரையோரங்களிலிருந்த கடற்புலிகளின் முக்கிய தளங்கள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன என்றும் அவர்கள் இராணுவ ரீதியாக உச்ச அழிவைச் சந்தித்திருக்கின்றனர் என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார்.

ஆனால், இந்தப் பேரலை அனர்த்தத்தில் (12 ஆம பக்கம் பார்க்க)

## உயிரிழந்த மக்களுக்காக குடாநாட்டில் துக்கதினம்!

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று யாழ். குடாநாடெங்கும் கறுப்புக்கொடி கட்டி, சோககீதம் இசைக்கப்பட்டுத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குடாநாட்டு வீதிகள் எங்கும் தோரணங்கள், வாழைகள், கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. முக்கிய சந்திகள்தோறும் ஒலிபெருக்கிகள்மூலம் சோககீதம் ஒலிபரப்பப்பட்டது.

(12 ஆம பக்கம் பார்க்க)



மெழுகுவர்த்திகளை ஏந்தியவாறு அஞ்சலி செலுத்தும் பெரியோர் மறறும சிறார்கள்

கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை ணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.

# பெண்களின் நலன்களை கவனிக்க மகளிர்குழுக்கள் அமைப்பது அவசியம்

## பத்மினி சிதம்பரநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கும் நடவடிக்கைகள் பெரும் உணர்வு வேகத்துடன் நடைபெற்று வருகின்றது. பதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டும் என்ற உணர்வுத் துடிப்பு தேசமெங்கும் அதிர்ந்து கொண்டிருக்கிறது. இயற்கையின் கோரத்தை எதிர்கொள்ள மனித ஒற்றுமையின் உரு கோலங் கொண்டெழுகிறது. இச்சூழலில் நாம் ஒவ்வொருவரும் நம் சிந்தனையை ஒருமுகப்படுத்தி நுணுக்கமாகச் செயல்புரிய வேண்டும்.

தற்காலிகமாக முகாம்களில் தற்கியிருக்கும் பாதிப்படைந்த மக்களின் தேவைகள் நுணுக்கமாகக கவனிக்கப்படவேண்டும் அவர்களின் தேவைகளைக் கண்டறிவதற்கு தொண்டர்கள் பெரும் முயற்சி எடுக்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை அணுகி அவர்கள் அருகிருந்து இந்த முயற்சியை எடுக்க வேண்டும். “உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம்” என்பதை அவர்கள் உணர நாம் வழிவகுக்க வேண்டும். பாரிய கொந்தளிப்பு அலைகளின் விசுவரூபத்தால் அச்சமடைந்து அதிர்ந்து போயிருக்கும் அவர்களோடு “அருகிருத்தல்” அவர்களை அதிர்ச்சியில் இருந்து மீள்விக்க மிகவும் முக்கியமானது. அது உடனடியாகச் செய்யப்படவேண்டியது.

பெண்களின் தேவைகள் பிரத்தியேகமானவை, நுணுக்கமானவை. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் பெண்களின், குழந்தைகளின் தேவைகள் மிக நுணுக்கமாகப் பார்க்கப்பட வேண்டும் என உதவி வழங்கும் அமைப்புக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

பெண்கள், குழந்தைகளின் பிரத்தியேக தேவைகளைக் கவனிக்க ஒவ்வொரு நிலையங்களிலும் பெண் பிரதிநிதிகள் கொண்ட சிறு குழுக்கள் அமைவது பொருத்தமானது. அவர்கள் தமது சில தேவைகளை ஆண் தொண்டர்களிடம் சொல்லத் தயங்குவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் சில குறிப்பிட்ட தேவைகளுக்காக பிரத்தி யேகமான் இடங்கள் ஒதுக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசிய மானது என நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்



## திருமதி சிவஞானசுந்தரம் சரஸ்வதி

ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் நெல்லியான் செம்பியன் பற்றை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி சிவஞானசுந்தரம் சரஸ்வதி அவர்கள் 31-12-2004 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற சரவணமுத்து, சிவஞானசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், ஞானசேகரம்(வவுனியா), சந்திரசேகரம் (கட்டப்பிராய்), குணசேகரம் (உடுப்பிட்டி) தவசேகரி(கனகபுரம்) குலசேகரி (ஆவரங்கால்) சிவசேகரம் (கொக்குவில்) விக்கினேஸ்வரன் (லண்டன்) கோணேஸ்வரன் (அக்கராயன்), திலகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைள் 01-01-2005 சனிக்கிழமை பகல் 1.00 மணியளவில் ஆவரங்கால், வன்னியசிங்கம்வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கருதடி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(1017)

## முத்து பேரம்பலம்

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொண்ட முத்து - பேரம்பலம் (சிற்றம்பலம்) 31-12-2004 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சுசீலாவதி கோபாலகிருஷ்ணன், தமிழ்ச்செல்வி, தமிழ்ச்செல்வன் (கண்ணன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அருமைநாதர், பரிமளம் (பஞ்சு), உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ண பவானி, கிருஷ்ணகுகன், கிருஷ்ண ஜெகன், சிந்துஜா, பாலகிருஷ்ணன், கிருஷ்ண ரஞ்சிதா, லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் கேதாராணி, திவாகரன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 01.01.2005 சனிக்கிழமை இன்று பி.ப 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சசிகலா - கோபால்**
**சுசீலா - கோபால்**
**செல்வி, கண்ணன்**
**(பிள்ளைகள்)**

(3580)

# ஸ்கந்தவரோதயா கல்லூரியில் தரம் ஒன்று வகுப்பு ஆரம்பம்

(உடுவில்)

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் புதிய ஆண்டில் இருந்து தரம் ஒன்று வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தரம் 6 தொடக்கம் 13 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. நீண்டகாலமாக தரம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை பெற்றோர்களாலும், பழைய மாணவர்களாலும் முன்வைக்கப்பட்டது. இதனை அடுத்து வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தரம் ஒன்று வகுப்பை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

அத்துடன் ஆசிரியவளம் புதிய கட்டடம், விளையாட்டு உபகரணம், கற்பித்தல் உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே எதிர்வரும் முதலாம் தவணை ஆரம்பத்தில் தரம் ஒன்றில் பிள்ளைகளை சேர்க்க விரும்பும் பெற்றோர் உடனடியாக அலுவலகத்தில் விண்ணப்ப படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து கொடுக்குமாறு அதிபர் க.சிவாஜி அறிவித்துள்ளார்.

(101)

# கோதுமை மாவை அதிக விலையில் விற்ற வர்த்தகருக்கு எச்சரிக்கை

திருநெல்வேலி, குருநகர் பகுதியில் கோதுமை மாவினை பதுக்கல் செய்து கறுப்புச்சந்தையில் ஒரு மூட்டை மாவினை இரண்டாயிரம் ரூபாவுக்கு விற்ற வர்த்தகர்கள் சிலர் மக்கள் நலன்பேணும் குழுவினால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

தற்போது மாவின் தட்டுப்பாட்டினை சாதகமாகப் பயன்படுத்தி மாவினை உயர் விலையில் விற்று வருகின்றனர்.

இவ்வாறு உயர் விலைக்கு விற்பனை செய்வது குறித்து யாழ் மாவட்ட மக்கள் நலன் பேணும் குழுவிடம் செய்த முறைப்பாட்டையடுத்து உயர் விலையில் கோதுமை மா விற்ற வர்த்தகர்கள் மேற்படி குழுவினரிடம் சிக்கினர். இவர்கள் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் யாழ்.மாவட்ட மக்கள் நலன் பேணும் குழுவின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

கோதுமைமாவினை உயர் விலையில் விற்பனை செய்பவர்கள் பற்றிய தகவல்களை 0773086813 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு தெரிவிக்கபபட்டுள்ளது.

## யாழ்.கல்வி வலய ஆசிரிய, மாணவர்களுக்கு

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட நிலவரம் பற்றி ஆராய் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு தத்தமது பாடசாலைக்கு செல்லுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

சுனாமி கடல் கொந்தளிப்பு அனர்தம் தொடர்பாக யாழ்.மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒன்று நாளை 5.00 மணிக்கு வழமையாக நடைபெறும் இடமான நெல்லியடியில் நடைபெறவுள்ளது எனவே இவ் ஒருங்கிணைப்புக் கூட்டத்துடன் தொடர்புடையவர்களை தவறாது பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

UNIT
சலுகையிலுள்ள கணனித் தொகுதிகள்
UNI MULTIMED with DELL Monitor - 49,900/-
UNI DEV EXPERT with DELL Monitor - 66,900/-
UNI ULTRA - SATA EXPERT with DELL Monitor - 89,900/-
Free..!
Higher End Auto Shutdown UPS.
Hi-quality 2.1 Higher-End Woofer,
Screen Filter, Mouse Pad. Dust Cover & etc
UNI ULTRA - SATA COMPLETE with DELL Monitor 109,900/- → Free..!
GEEPAS 5.1 3800W HI-FI Woofer
மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி / நேரில்
- அரிய சந்தர்ப்பங்கள் எப்போதும் கிடைப்பதில்லை!
- கொழும்பு விலையில் கணனிகள் என்பது யாழ்ப்பாணத்தில குதிரைக் கொம்புதான்
- 3 வருட உதிரிப்பாக உத்தரவாதம் என்பது இலட்சத்தில் ஒருவரால்தான் முடியும்
இவை அனைத்தும் எங்களால்தான் முடியும்
Possible which are impossible
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.
MOB:- 077 3134737, 077 3134725, 077 6093477.
OFFER
இன்றுடன் முடிவடைகிறது
3 வரு
1500

| | | |
|---|---|---|
| Keyboard with Mouse | 850/- | |
| Woofer SP-299 | 4500/- | |
| Woofer MS-220AB | 2500/- | |
| GPASS 5.1 Woofer | 12500/- | |
| Power Supply ATX 400W | 2000/- | |
| Mouse | 300/- | |
| Optical Mouse | 700/- | |
| Optical Mouse | 1400/- | |

இந்த அரிய சந்தர்ப்பத்தை உபயோகிக்க நல்ல
Universal Technology
Station Road, Chunnak

விசேட விலைக் கழிவுடன்
வண்ணமுகில்சோலை டிஜிற்றல் கலர்லாப்.
உலகில் முதல்தரமான NORITSU (3101) டிஜிற்றல் பிறின்ரர் மூலம் (பாஸ்,கறுப்பு வெள்ளை புகைப்படங்களை நான்
நிமிடங்களில் மிகவும் தரம் வாய்ந்த (Kodak Royal) பேப்பரில் பெற்றுக்கொள்ளவும்.
சிறிய அளவில் இருந்து. 12 X 18 அளவுகளில் உங்கள் புகைப்படங்களைப் பெறவு.
CD,Floppy,போன்காட், டிஜிற்றல் கமரா Cf,MS,MD ஆகியவற்றில் இருந்து புகைப்படங்களைப் பெறவும்.
திருமணவாழ்த்துக்கள்,பிறந்தநாள்வாழ்த்துக்கள்,பூப்புனிதநீராட்டு விழா மற்றும் விசேடவைபவங்களுக்கான வரவேற்பு அட்டை
உங்கள் புகைப்படங்களை நெக்கற்றிவை பழுதடையாவண்ணம் CDயில் சேமித்து வைக்கவும்.
உங்களில் விளம்பர அட்டைகள்(விசிட்டிங்காட்டுகளை) நாட்காட்டிகள், என்பவற்றைப் பெறவும்.
புதிய தரம் வாய்ந்த அல்பங்கள், DURO காட்பிறேம்கள், லெமினேட்டுகள் செய்து கொள்ளவும்.
உங்கள் பழைய படங்களை புதிதாக்கிக்கொள்ளவும்.
மெட்லிக் பிறின்ற் மூலம் 75 வருட உத்தரவாதத்துடன் உங்கள் புகைப்படங்களை வழங்கும் ஒரே நி
கிளி/ பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள வண்ணமுகில் சோலை நிறுவனம்.
வாடிக்கையாளர்களே புதுவருடத்தை முன்னிட்டு.
விசேட கழிவுகளுடன்.
விசேட பரிசுத்திட்டங்களும்.
விபரங்களுக்கு வண்ணமுகில் சோலை
டிஜிற்றல் கலர் லாப்
பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி.

# பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்காக அவுஸ்ரேலியாவிலும் நிதி சேகரிப்பு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக அவுஸ்ரேலிய - மெல்போர்ன் வாழ் தமிழ் மாணவர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மெல்போர்ன் நகரத்தில் உள்ள Burke Street Mall என்னும் இடத்தில் சிறிய மேடையில் - தமிழர்களின் பாரம்பரிய வாத்திய இசைகளுடனும், மேலைத்தேய வாத்திய இசைக்கருவிகளையும் இணைத்து இசைத்து மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்து கடற் புவி நடுக்கத்தால் ஏற்பட்ட அழிவுகளை வெளிப்படுத்தும் புகைப்படங்களும், சுவரொட்டிகளும் பார்வைக்கு வைககப்பட்டு அந்தச் சுற்றாடலில் உண்டியல் மூலம் மாணவ அமைப்புச் செயற்பாட்டாளர்களால் நிதி சேகரிக்கப்பட்டது.

தமிழீழ மக்களின் அழிவு விவரங்கள் இருட்டடிப்பு செய்யப்படுவது பற்றியும், நிவாரணங்களோ வேறு எந்த உதவிகளோ தமிழ் மக்களுக்கு இன்னும் கிடைக்காமையையும் விளக்கிக்கூறி - சுமார் 10 மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட நிதிசேகரிப்பில் பல்லின மக்களிடமிருந்தும், அவசர நிவாரண நிதியாக சுமார் 20 ஆயிரம் அவுஸ்ரேலிய டொலர்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து அவுஸ்ரேலிய - மெல்போர்ன் நகரில் புலம்பெயர்ந்த தமிழீழ மக்களை ஒன்றுதிரட்டி பல பகுதிகளிலும் உள்ள பல்லின மக்களை வீடு வீடாகச் சென்று அணுகி உண்டியல் மூலம் நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு பல்லின மக்களின் பெரும் ஆதரவு கிடைத்துள்ளதோடு, இந்த நிதி சேகரிப்பு நிகழ்வைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இயற்கை அனர்த்தம் நடைபெற்ற நாளிலிருந்து தொடர்ந்து இன்றுவரை 24 மணிநேர இன்பத் தமிழ் ஒலி வானொலி மூலமும், அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாகவும் பாரிய நிதி சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுச் செயற்பாட்டார்களும் ஒன்றிணைந்து அவுஸ்திரேலிய சிட்னி மாநகரில் புலம்பெயர் வாழ் தமிழீழ மக்களை ஒன்றுதிரட்டி அங்கு பல்லினத்தவர்களிடம் நிதி சேகரிக்கும் முயற்சியை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், பேர்த் மாநிலத்திலிருந்தும் குயின்ஸ்லாந்து மாநிலத்திலிருந்தும், கன்பரா, அடிலெய்ட் மாநிலத்திலிருந்தும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர்களால் பாரிய நிதி சேகரிப்பு முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.












சுனாமி கடற்கொந்தளிப்பால் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அரசியற்துறை அலுவலகத்தில் தமிழீழ தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருப்பதையும், பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருப்பதையும், யாழ்.மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் சிங்கக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருப்பதையும் காணலாம்.

## போலி தங்க நாணயம் விற்றோர் கைது

பித்தளையால் செய்து தங்க முலாம் பூசிய ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட போலி நாணயங்களை விற்பனை செய்த இருவர் நேற்று அதிகாலை மாத்தளை மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைக் கைதுசெய்த பொலிஸார்- விற்பனைக்கு தயார் நிலையில் இருந்த 700 போலி நாணயங்களையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களிடமிருந்த நாணயங்கள் தலா ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கனடா மருத்துவர் குழு தாயகம் நோக்கி விரைவு

தாயகத்தில் கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட அனர்த்தங்களையடுத்து ஏற்பட்ட மருத்துவச் சீர்கேடு மற்றும் தொற்றுநோய் பரவும் அபாயம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கனடா தமிழ் சமூகத்தைச் சார்ந்த மருத்துவர்கள் குழு ஒன்று இன்று தாயகம் நோக்கிப் புறப்பட்டது.

கனடாவில் வசிக்கும் வைத்தியர்கள் எட்டுப்பேரும், மருத்துவத்துறை மாணவர் ஒருவர், மருத்துவத் தாதி ஒருவர் என பத்துப் பேரடங்கிய முதற்கட்டக் குழு நேற்று மாலை ரொறன்ரோவிலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

# விமானநிலையத்தில் இடநெருக்கடி நிவாரண விமானங்கள் திரும்பின!

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை அடுத்து நிவாரணங்களுடன் நாட்டுக்குள் வரும் விமானங்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளதால் விமான நிலையத்தில் பாரிய இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால், நேற்றுமுன்தினம் இரவு 12 மணிக்கும் நேற்று அதிகாலை 6 மணிக்கும் இடையில், நிவாரணங்களை ஏற்றி வந்த சுமார் 8 வெளிநாட்டு விமானங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

நிவாரணப் பொருட்களை ஏற்றி வரும் விமானங்களைத் திருப்பி அனுப்பும் நிலை ஏற்பட்டுள்ள போதும், அவற்றைத் தமிழர் தாயகத்தில் உள்ள பலாலி விமான நிலையத்துக்கு அனுப்ப அரசு முயற்சிக்கவில்லை என்று தமிழ் மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பொருட்களை ஏற்றி வரும் வெளிநாட்டு கப்பல்களும் விமானங்களும் கொழும்பில்தான் இறங்கவேண்டுமா? பலாலியில் விமானங்கள் இறங்கலாம், காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளிநாட்டு நிவாரணக் கப்பல்கள் வரலாம். அவற்றை அரசு ஒழுங்கு செய்யாதது ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

## கோதுமைமாவுடன் லொறிகள் கைப்பற்றப்பட்டன

கொட்டகலை நகருக்குத் திருகோணமலையிலிருந்து எடுத்துவரப்பட்ட பெருமளவு கோதுமை மாவேறொரு வர்த்தகருக்குக் கூடிய விலைக்கு விற்பனைசெய்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இது குறித்து கொட்டகலை மக்கள் முறையிட்டதையடுத்து, விற்பனை செய்யப்பட்டதாக கூறப்பட்ட கோதுமை மாவை எடுத்து வந்த இரு லொறிகளும் திம்புல்ல பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

## பட்டதாரிகளுக்கு இவ்வாரம் நியமனம்

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனங்கள், அமைச்சுக்கள் மற்றும் மாகாணசபைகளில் - திட்டமிட்டபடி அடுத்தமாதம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பட்டதாரிகள் குறிப்பிட்ட திகதிகளில் தமக்கு அறிவிக்கப்பட்ட வேலை வாய்ப்பு இடங்களில் சமுகமளிக்கவேண்டும் என்று நிதி அமைச்சின் முகாமைச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின்படி நியமனங்கள் ஒப்படைக்கப்படும் என்று பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

# யுத்தமொன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் இணங்கினால்- கடல் பெருக்க அபாய தேசிய நிவாரணப் பணிகளில் அவர்களையும் இணைத்து செயற்பட அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும், இது குறித்து ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் - நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு மத்தியில் யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

நாடு இன்று முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் கட்சி பேதமின்றிச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் எந்த வித பேதங்களுமின்றி நிவாரணப் பொருட்களை அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# கனடா மாணவர்கள் சேகரித்த நிதியில் ஒரு தொகை அனுப்பிவைப்பு

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் நிவாரணத்துக்கென கனடா - ஒட்டாவாவிலுள்ள கால்ரன் பல்கலைக்கழகத்தில் தற்போது கற்கும் மாணவர்களும், பட்டதாரிகளாக வெளியேறிய மாணவர்களும் இணைந்து திரட்டிய நிதியிலிருந்து ஒரு மில்லியன் ரூபா உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி தமிழர் சமூக, பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்துக்கு உடனடியாகக் கிடைக்கும் வண்ணம் துரித பணப்பரிமாற்றல் நிறுவனத்தினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஏனைய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், உயர்தரப் பாடசாலைகள் என்பவற்றுக்கான முன்மாதிரியாக அமைந்த இந்த நிகழ்வில் கால்ரன் பல்கலைக்கழக மாணவர்கள் 10 டொலர் பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்களை மக்களிடம் விநியோகித்து இந்த நிதி சேகரிப்பை மேற்கொண்டிருந்தனர்.

தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த நிதி சேகரிப்பில் தங்களால் இன்னொரு மில்லியன் ரூபாவை சேகரித்து அனுப்பமுடியும் என அந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்கும் பெரும்பாலான மாணவர்கள் பாலகர்களாக இருக்கும் போதே புலம் பெயர்ந்தவர்கள் என்பதும், பலர் கனடாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இம் முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் மக்களைக் காப்பாற்றுவதற்கான இவ்வாறான பணிகளில் ஈடுபட்டு தாயக மண்ணில் அல்லலுறும் மக்களின் துயர்துடைக்க முன்வரவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 2 ஆவது டெஸ்டை சமநிலையாக்கி இங்கிலாந்து அணியின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது தென்னாபிரிக்கா!



இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் டேர்பனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டின் ஐந்தாம் நாளில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதனால் போட்டி சமநிலையில் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

378 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, நான்காம் நாள் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்பின்னர் நேற்றுமுன்தினம் தனது ஆட்டத்தை அந்த அணி ஆரம்பித்தது. ஆனாலும் இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்கள் இவர்களை நீடித்தநேரம் நிற்க அனுமதிக்கவில்லை. இதனால் விக்கெட்டுக்கள் சரிந்த வண்ணமிருந்தன. ஒரு கட்டத்தில் 183 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுக்களை இழந்து தோல்வியின் விளிம்பில் தத்தளித்தது.

ஆனாலும், பொலக்கும் டி. வில்லியர்சும் எட்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 85 ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த நிலையில் பொலக் 35 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரன் அவுட்டானார். அதன்பின்னர் வந்த என்ரினி - டி.வில்லியர்சுடன் இணைந்து தடுப்பாட்டத்தை இருவரும் மேற்கொண்டதில் விக்கெட்டை விழாமல் பாதுகாத்துக்கொண்டனர்.

இந்த நிலையில் போதிய வெளிச்சமில்லையெனத் தெரிவித்து நடுவர்கள் ஆட்டத்தை முன்கூட்டியேமுடிக்க போட்டி சமனானது. அந்தவேளை தென்னாபிரிக்கா 8 விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டங்கள் எடுத்திருந்தது.



தெனன்ாபிரிக்க அணியில் கிப்ஸ் 36, ருடோல்ப் 61, ஜர்சாவெல்ட் 49, பொலக் 35 டி.வில்லியர்ஸ் மற்றும் என்ரினி இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 52, 16 ஓட்டங்களைப பெற்றனர்.

பந்துவீச்சில் ஹோகாட், ஹர்மிசன் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் - பிளின்ரொப், ஜோன்ஸ், ஜைல்ஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினா. இந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில 7 விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களையும் எடுத்திருந்தது.



தென்னாபிரிக்க அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 332 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களையும் எடுத்திருந்தது.

இந்த டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்ததையடுத்து 2004 இல் தோல்வியையே சந்திக்காத பெருமையை இங்கிலாந்து அணி பெற்றுள்ளது.

# பாகிஸ்தான் - இந்தியா போட்டிக்கான அட்டவணை 15 ஆம் திகதி வெளியாகும்

(புதுடெல்கி)

பாகிஸ்தான் தொடருக்கான போட்டி அட்டவணையை எதிர்வரும் 15 ஆம் திகதி இந்திய கிரிக்கெட் சபை வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இநதிய கிரிக்கெட் அணி கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம்செய்து விளையாடியது. இதில் டெஸ்ட் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3-2 என்ற கணக்கிலும் கைப்பற்றியது.

இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தான் அணி பெப்ரவரி மாதம் இந்தியா வரவுள்ளது. அந்த அணி இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் ஆட்டத்தில் விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் தொடருக்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை முடிவுசெய்யாமல் இருந்தது. இதனால் போட்டி அட்டவணையை அறிவிக்குமாறு பாகிஸ்தான் பல முறை கேட்டுக்கொண்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி பாகிஸ்தான் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்படும் என்று சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா தெரிவித்துள்ளார். மும்பையில் விளையாட பாகிஸ்தான் விரும்பவில்லை என்று கூறப்படுவது பற்றி அவரிடம் கேட்டபோது அப்படி எந்தத் தகவலும் வரவில்லை என்று தெரிவித்தார்.

# அவுஸ்ரேலிய அணியில் மக்கில், வற்சன் இணைப்பு

பாகிஸ்தானுடனான 3 ஆவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் சுழற்பந்துவீச்சாளர்கள் மக்கில் மற்றும் வற்சன் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்டில் 491 ஓட்டங்கள் வித்தியா சததிலும்,மெல்போர்னில் நடந்த 2 ஆவது டெஸ்டில் 9 விக்கெட் வித்தியாசத்திலும் அவுஸ்ரேலியா வென்று தொடரைக் கைப்பற்றியது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி நாளை சிட்னியில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் சுழற்பந்து வீச்சாளர்கள் மக்கில், வற்சன் ஆகியோர் மீண்டும் இடம்பெற்றுள்ளனர். உள்ளூர் போட்டியில் விளையாடுவதால் பிரட்லீ இடம்பெறவில்லை. முதல் இரண்டு டெஸ்டிலும் அவருக்கு 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை.

3 ஆவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி வருமாறு -

பொண்டிங் (கப்டன்), லாங்கர், மத்தியு, ஹைடன், மாா்ட்டின், லீமன், கிளார்க், கில்கிறிஸ்ட், வோன், ஜிலெஸ்பி, கஸ்பரோவிச், மக்ரா, வற்சன், மக்கில்.

# விளையாட்டு

# நியூஸிலாந்து செல்லுமா? இந்திய கிரிக்கெட் அணி!

நியூஸிலாந்தில் விளையாடி வந்த இலங்கை கிரிக்கெட் அணி தொடரை பாதியில் ரத்துச்செய்துவிட்டு நாடு திரும்பியுள்ள நிலையில் இந்திய அணி நியூஸிலாந்துடன் விளையாடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபைத்தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா கூறியதாவது -

நியூஸிலாந்திடம் இருந்து இதுவரை எந்தவிதமான வேண்டுகோளும் இந்திய கிரிக்கெட் சபைக்கு வரவில்லை. இந்திய வீரர்களும் பெப்ரவரியில் தான் பாகிஸ்தானுடன் விளையாடவுள்ளனர்.

நியூஸிலாந்திடம் இருந்து வேண்டுகோள்வரும் பட்சத்தில் அது குறித்து செயற்குழுகூடி முடிவு செய்யும். தற்போது வேறு ஏதும் என்னால் கூறமுடியாது. முதலில் அழைப்பு வரட்டும் அதன் பிறகு பார்க்கலாம் என ரன்பீர்சிங் மகேந்திரா தெரிவித்தார்.

இலங்கை அணி திடீரென நாடு திரும்பியதால் நியூஸிலாந்தின் விளையாட்டு இடைவெளியைச் சமாளிக்க வேறு நாடுகளை அழைப்பது குறித்து ஆலோசனை செய்து வருகிறோம். இந்தியா மட்டுமே ஜனவரியில் போட்டிகள் இல்லாமல் உள்ளது என நியூஸிலாந்து கிரிக்கெட் செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் ஸ்னீடன் - வெலிங்டனில் கருத்துத் தெரிவித்தார்.

# குடிபோதையில் கார் ஓட்டிய பிஹெல்ப்சுக்கு தண்டனை!

குடிபோதையில் கார் ஓட்டிய அமெரிக்க நட்சத்திர நீச்சல் வீரர் மைக்கேல் பிஹெல்ப்ஸை அடுத்த ஒன்றரை ஆண்டுகள் கண்காணிக்க அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் அவருக்கு 15 ஆயிரம் டொலர் அபராதமும் விதித்துள்ளார் நீதிபதி லொயிட் ஓ.ஓயிட் ஹெட். தண்டனைக்காலத்தில் மாதம் ஒருமுறை கண்காணிப்பு அதிகாரியிடம் அவர் ஆஜராக வேண்டும். அத்துடன் குடிபோதையில் கார் ஓட்டுவதால் ஏற்படும் ஆபத்துக் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு 3 வகுப்புக்கள் எடுக்கவேண்டும்.

மேலும் இடைப்பட்ட காலத்தில் குடி மற்றும் போதை மருந்துகள் பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கவேண்டும் என அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேரிலாண்ட் மாகாண சட்ட விதிப்படி மது அருந்துவதற்கு 2 வயது குறைவாக உள்ளார் 19 வயதாகும் பிஹெல்ப்ஸ். குடிபோதையில் நிறுத்தும்கோட்டை மீறி காரை ஓட்டிச்சென்றதால் நவம்பர் 4 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்தே தண்டனைக்கு உள்ளாகியுள்ளார். ஏதென்சில் கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 6 தங்கப்பதக்கங்கள் உட்பட 8 பதக்கங்களை கைப்பற்றி அமெரிக்காவுக்கு பெருமை சேர்த்தவர் மைக்கேல் பிஹெல்ப்ஸ்.

அப்போட்டியில் மேலும் ஒரு தங்கம் வென்றிருந்தால் மார்க் ஸ்பிட்ஸின் ஒலிம்பிக் சாதனையை அவர் சமன்செய்திருப்பார். ஆனால் 2 போட்டிகளில் வெண்கலப்பதக்கங்களையே அவரால் வெல்ல முடிந்தது.

# டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்கு பங்களாதேஷ் வந்தது சிம்பாப்வே

(டாக்கா)

சிம்பாப்வே அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள்கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. இதற்கான சிம்பாப்வே அணி - கப்டன் தைபு தலைமையில் நேற்றுமுன்தினம் டாக்கா வந்தது. இந்தத் தொடர் இரு அணிகளுக்குமே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கடந்த மே மாதம் சிம்பாப்வே கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட சர்ச்சையால் கப்டன் ஹீத் ஸ்ரீக் உட்பட 14 வீரர்கள் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

தொடர்ந்து இவர்களுடன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. இந்தப் பிரச்சினைக்குப் பிறகு இலங்கை, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து அணிகள் சிம்பாப்வேக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் தொடரில் மட்டும் பங்கேற்றது. டெஸ்ட் அந்தஸ்துப்பெற்ற சிம்பாப்வே அணியில் தற்போது இரண்டாந்தர வீரர்களே அதிகம் இடம்பெற்றுள்ளனர்.

இதனால் இவர்களின் டெஸ்ட் அந்தஸ்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் 7 மாதங்களுக்குப் பிறகு இந்த அணி பங்களாதேஷுடன் டெஸ்ட் தொடர் ஒன்றில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் ஜனவரி 6 இல் சிட்டகொங்கிலும், 2 ஆவது டெஸ்ட் ஜனவரி 16 இல் டாக்காவிலும் நடைபெறவுள்ளன. இதைத் தொடர்ந்து 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் மோதுகின்றன.

## நாளைய சிட்னி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியில் மாற்றமில்லை

மூன்று டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலியா தொடரைக் கைப்பற்றியது. இந்நிலையில் மூன்றாவது போட்டி சிட்னியில் நாளை நடைபெறவுள்ளது. முதல் இரண்டு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணியின் படுதோல்விக்கு காரணம் வீரர்களின் காயம்தான்.

கபடன் இன்சமாம் காயம் காரணமாக மெல்போர்னில் நடந்த இரண்டாவது போட்டியில் 'பங்கேற்கவில்லை. இதே போட்டியில் சகலதுறைவீரர் அப்துல் ரசாக் திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். முகமது சமி, அக்தர் இருவரும் காயத்துடனேயே பந்துவீசினர்.

இதனால் பாகிஸ்தான் அணியில் பெரும் மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தேர்வுக்குழுவின் தலைவர் வாசிம் பாரி கூறுகையில் -

சிட்னி போட்டிக்கான அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படாது. முத்தரப்பு தொடரின்போது மட்டுமே மாற்றங்கள் செய்யப்படும். காயமடைந்த வீரர்களுக்குப் பதிலாக அணியில் உள்ள மாற்று வீரர்கள் விளையாடுவார்கள் எனத் தெரிவித்தார்.



நியூஸிலாந்து சென்ற இலங்கை அணி தற்போது ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினையடுத்து போட்டிகளை ஒத்திவைத்துவிட்டு நேற்றையதினம் நாடுதிரும்பியது. நேற்று வந்த வீரர்கள் விமான நிலையத்தில் நிற்பதனைக் காணலாம்.

# கொக்கும் புத்திசாலி நண்டும்




(தொடரும்)

இங்கே மடிக்கவும்



## சிறுவர் அரங்கம்

அன்புக்குரிய சிறுவர்களே!

பாடசாலை நாட்களில் காலையில் எழுந்ததும் பல்துலக்கி, நீராடி, உணவருந்தி பாடசாலை செல்ல ஆயத்தமாவீர்கள். அதன்பின்னர்தான்- சீருடை, சப்பாத்து, பாடசாலைக் கொப்பிகள், புத்தகங்கள், பென்சில், பேனா போன்றவற்றைத் தேடுவீர்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக இருப்பவற்றைத் தேடி எடுக்க வேண்டும்.

சிலருக்கு வீட்டிலுள்ளவர்கள் தேடிக் கொடுக்க வேண்டும். இது பாடசாலை நாட்களில் உங்களுக்கு ஏற்படும் பரபரப்பு. இதற்கு என்ன காரணம்?

உங்களுடைய பொருட்களை அவற்றுக்குரிய இடங்களில் வைக்காததே காரணம். எனவே ஒவ்வொரு பொருட்களையும் அதற்குரிய இடங்களில் வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இதனால் காலை நேரப் பரபரப்பு இல்லாமல் போகும். நேரமும் மிச்சமாகும்.

பாசமுடன் சாரு அக்கா

## அன்பு

அன்பை நாம் விதைத்திடுவோம்.
அறுவடையாகும் இன்பமடா
அன்பை நாங்கள் மதித்திடுவோம்
அகன்று விலகும் துன்பமடா.

அன்பு ஒன்றே தரணியிலே
அனைத்து மதங்களின் அடிப்படை
இன்பம் அதனால் கிடைத்துவிடும்
என்பது ஒன்றே வெளிப்படை.

அன்பைப் பரஸ்பரம் பகிர்ந்திடுவோம்
அன்பு செய்து மகிழ்ந்திடுவோம்
அன்பை நாளும் பயின்றிடுவோம்
அன்பை அன்பால் வென்றிடுவோம்.

டபிள்யு.கிறிஸ்டீனா டியுலக்ஷி,
தரம் 9,
உடுவில் மகளிர் கல்லூரி.



## நத்தார் நல்வாழ்த்துக்கள்

# ஏமாந்த பண்ணையார்

ஒரு கிராமத்தில், இசக்கிமுத்து என்றொரு படிக்காத பணக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் தங்கத்தினால் செய்த ஒரு வெற்றிலைப் பெட்டி வைத்திருந்தார். அந்தப் பெட்டியில் நிறையப் பணம் இருக்கும். அவர் தன்னைப் பெரிய அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

தினமும் தனது வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொள்ளுவார். வெற்றிலை போட்டபடி தெருவில் வருவோர், போவோரை அழைத்துத் தன்பக்கத்தில் வைத்துக் கொண்டு, பல கதைகள் அளந்துவிடுவார். அதையெல்லாம் அவர்கள் கேட்கவேண்டும். அதன் பின்னர்தான், அவர்களைப்போக அனுமதிப்பார்.

ஒருநாள் வெகு நாட்களுக்குமுன் அவரிடம் வேலை பார்த்த 'வேதா' என்பவன் தெருவில் வந்தான். தனது எஜமானரைக் கண்டதும், அவர் அருகே பணிவோடு வந்து வணங்கினான். "வேதா, ஏன் இத்தனை நாட்களாக இந்தப் பக்கம் வரவில்லை?" - என்று கேட்டார். 'நகரத்துக்குப் போயிருந்தேன்' என்றான் வேதா.

'அங்கு என்னென்னவெல்லாம் கற்றுக் கொண்டு வந்திருக்கிறாய்?' - என்று பணக்காரர் கேட்டார். 'நான் அங்க வட்டாட்டம், சதுராட்டம், நீட்டோட்டம் கற்றுக் கொண்டேன்' - என்றான் வேதா.

பணக்கார எஜமானருக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. இது என்னடா புதுப்புது வித்தையாயிருக்கே! என்று ஆவலோடு கேட்டார்.

அதற்கு வேதா 'அந்த வித்தைகளைக் காட்டவேணும் என்றால் என் தலையில் ஏதாவது பாரமாக வைக்க வேண்டும். உங்களுடைய வெற்றிலைப் பெட்டியைத் தாருங்கள். வித்தையைக் காட்டிவிட்டுத் தருகிறேன்' - என்றான்.

தங்கத்தால் செய்த தனது வெற்றிலைப் பெட்டியை, நன்றாகப் பூட்டிவிட்டுச் சாவியைத் தன் கையில் வைத்துக் கொண்டு, பெட்டியை வேதாவிடம் கொடுத்தார் பணக்கார எஜமான்.

உடனே பெட்டியைத் தலையில் வைத்துக்கொண்டு வட்டம், வட்டமாக ஓடிவந்து, 'இதாங்க வட்ட ஓட்டம்' என்றான் வேதா. 'சபாஷ்... சபாஷ்...' என்றார் எஜமான். பின்பு சதுரம், சதுரமாக ஓடிவிட்டு 'இதுதான் சதுராட்டம்' - என்றான் வேதா. 'சபாஷ்... சபாஷ்...' என்று பலமாகத் தலையை ஆட்டினார், எஜமானர்.

'எஜமான் இப்போது நீட்டோட்டம் காட்டப் போகிறேன். ரொம்ப வேடிக்கையாக இருக்கும் என்றதும், உடனே 'எங்கே! எங்கே! அந்த நீட்டோட்டத்தை ஆடிக் காட்டு என்றார் எஜமான்.



தலையில் இருந்த தங்க வெற்றிலைப் பெட்டியை நன்றாகப் பிடித்துக்கொண்டு 'இதுதான் நீட்டோட்டம்...' என்று கூறியவாறு வேகமாகத் தெருவில் ஓடினான். வேதா. ஓடிக் கொண்டிருந்தவனைச் சிறிது நேரத்தில் காணவில்லை.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் 'வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடுறான். அது தகரப் பெட்டியென்றால் பரவாயில்லை. தங்கப் பெட்டியாயிற்றே' - என்றனர்.

'ஓடட்டுமே! அவன் எங்கே ஓடினாலும் திரும்பி இங்கே தான் வரவேண்டும். ஏனென்றால், பெட்டிச்சாவி என்னிடம் தானே இருக்கு' என்றார் எஜமான். இவரது முட்டாள்தனமான பதிலைக்கேட்டுக் கூடியிருந்தவர்கள் தங்களுக்குள் சிரித்துக்கொண்டனர்.

## பொது அறிவு

1. பனைத்தீவு இந்தக் கண்டத்தில் உள்ளது?
   அமெரிக்காவுக்கு மேற்கே தென்பசுபிக் கடலில் உள்ளது.
2. ஒலிம்பிக் போட்டியில் அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண்களுக்கான விளையாட்டு எது?
   உதைபந்தாட்டம்
3. தமிழீழத்தின் தேசியப் பூ எது?
   கார்த்திகைப் பூ
4. ஒஸ்கார் விருது வழங்கும் விழா முதலாவதாக நடைபெற்ற ஆண்டு எது?
   1929
5. சமாதானத்தின் சின்னம் எது? அதை அமைத்தவர் யார்?
   வெண்புறா. புதுமுறை ஓவியத்தின் தந்தை என்று சிறப்பிக்கப்படுபவரான பப்லோ பிக்காஸோ.

மு. நிவிதா,
தரம் 05.
மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

- கீதாஞ்சலி எனும் நூலை இயற்றியவர் யார்?
- முட்டாள் பறவை என வர்ணிக்கப்படுவது எது?
- முட்டையில் இல்லாத விட்டமின் எது?
- உலகில் உள்ள மொத்த பாம்புகளின் வகைகள் எத்தனை?
- மனித உடலில் பயனற்ற உறுப்பு எது?

இரவீந்திரநாத் தாகூர்
வான்கோழி
விட்டமின் - C
2500
குடல்வளரி

மா.நாகவதனி
தரம் - 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும் தொலைந்த வைரம்



யோ.சத்யன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாதன் போட்ட கூச்சலைக் கேட்டும். இளையதம்பியின் அதிரடி நடவடிக்கையைப் பார்த்தும் கலைவாணி நகைக் கடையின் முன்பாக திருவிழா காணவந்ததைப் போல வேடிக்கை பார்ப்போர் கூட்டம் கூடியது.

கடைக்குள்ளிருந்த முத்துவேலுவும்சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தார். கூடி நின்றவர்களில் ஒருவரின் கைத் தொலைபேசியை வாங்கிய இளையதம்பி. பொலிஸ் நிலையத்துக்கு ஃபோன் செய்து தனது ஜீப்பை உடனடியாகக் கலைவாணி நகைக்கடைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். கடையின் முன்னால் கூடி நின்றவர்களைப் பார்த்து. எல்லாம் முடிந்துவிட்டது நீங்கள் போய் அவரவர் வேலை களைக்கவனித்திடுங்கள் என்று சொல்லி. அவர்களைக் கலைந்து போகச்செய்தார்.

வேதனையோடு நாதனைப் பார்த்த முத்துவேலு- நாதன் ஏன் இப்படிச் செய்தாய் வேலையில்லாது அநாதையாக அலைந்து திரிந்த உனக்கு வேலைகொடுத்து உதவிய எனக்கு நல்லதொரு உபகாரம்தான் நீ செய்தாய் என்று கண்கள் கலங்கச் சொன்னார். பின்னர் இளையதம்பியைப் பார்த்து இளையதம்பி இவனை மன்னித்துத் துரத்திவிடுங்கள். எங்கேயாவது போய்ப் பிழைத்துக்கொள்ளட்டும் என்று கேட்டுக் கொண்டார். சரி வாருங்கள் ஜீப் வரும்வரை கடைக்குள்ளே சென்று காத்திருக்கலாம் என்று சொல்லிய இளையதம்பி. நாதனையும் இழுத்துக் கொண்டு உள்ளே வந்தார். உள்ளே வந்தவர் நாதனைக் கூட்டிக் கொண்டு நேராகப் பட்டறைக்குள் போனார்.

பட்டறையிலிருந்த கதிரை ஒன்றில் நாதனை இருக்கச் செய்துவிட்டு அவனருகே சென்ற இளையதம்பி- நாதன் மரியாதையாக இப்போதே வைரத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லிவிடு பொலிஸ் நிலையத்துக்குப் போன பின்னர் உன்னை நிதானமாக இப்படியெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க மாட்டேன் நினைவிருக்கட்டும் என்று மிரட்டினார்.

### உண்மை வெளிவந்தது

இனிமேலும் செய்த தவறை மறைத்து நாடகமாடுவதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்துகொண்டான் நாதன். ஐயா வைரத்தை நான்தான் எடுத்தேன். ஆனால் அதைத் திட்டம் போட்டு நான் திருடவில்லை. காலையில் கடையின் நிலத்தைத் துடைத்துச் சுத்தம் செய்யும்போது முத்துவேலு ஐயாவின் கதிரைக்கு அடியிலே வீழ்ந்து கிடந்த வைரத்தைப் பார்த்தேன். வைரத்தை எடுத்து ஐயாவிடம் கொடுத்து விடலாம் என்றுதான் முதலில் நினைத்தேன். எனினும் அதை விற்றால் நிறையப்பணம் கிடைக்கும் என்ற பேராசையால் எடுத்து மறைத்து வைத்தக் கொண்டேன்.

பேசிக்கொண்டிருந்த நாதனை இடைமறித்த இளையதம்பி. வைரத்தை எடுத்து ஒளித்த வரலாற்றைப் பிறகு எனக்கு விளக்கமாகச் சொல்லு நாதன். இப்போது வைரம் எங்கிருக்கிறது அதை முத லில் எடுத்துக்கொடு என்று சொன்னார்.

இளையதம்பியின் அருகே நின்ற முத்துவேலு அடேய் அப்பா நாதன் வைரத்தை நீ ஒன்றும் விழுங்கிவிடவில்லையே! அநியாயமாக எனது கடையில் உயிரைவிட்டுத் தொலைத்துவிடாதே என்று கவலையோடு சொன்னார். மிஸ்டர் முத்துவேலு நீங்கள் எதற்கும் கவலைப்படாது சிறிது நேரம் அமைதியாய் இருங்கள் என்று சொல்லிய இளையதம்பி நாதனின் கைவிலங்கைக் கழற்றிவிட்டார்.

### குப்பைத் தொட்டியில் கிடந்த பச்சை வைரம்

விரைந்து கடைக்கு வெளியே வந்த நாதன் வாசலருகே வைக்கப்பட்டிருந்த குப்பைத்தொட்டியை எடுத்து. தலைகீழாகத் திருப்பிக் கொட்டினான். தரையில் விழுந்த குப்பைகளைக் கையால் கிளறி அவற்றின் மத்தியிலே கசங்கிக்கிடந்த மிட்டாய் சுற்றிவரும் காகிதம் ஒன்றை எடுத்தான். காகிதத்தைப் பிரித்தவன் அதனுள்ளிருந்த பச்சை வைரத்தை எடுத்து. இளையதம்பியிடம் கொடுத்தான். நல்லபடியாக முன்னரே நீ இதைச் செய்திருந்தால் நேரமாவது மிச்சமாயிருக்கும் என்று சொல்லிய இளையதம்பி. அவனையும் கூட்டிக்கொண்டு மீண்டும் கடைக்குள் வந்தார்.

### முத்துவேலுவின் பெருந்தன்மை

வைரத்தை முத்துவேலுவிடம் கொடுத்தார் இளையதம்பி. இளையதம்பி வைரத்தான் கிடைத்துவிட்டதே ஏதோ தெரியாது தவறு செய்துவிட்டான் பாவம் பிழைத்துப் போகட்டும் விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார் முத்துவேலு.

நாதனைப் பார்த்த இளையதம்பி பார்த்தாயா நாதன். உனது முதலாளி எவ்வளவு பெருந்தன்மையானவர் என்பதை. இதுவே வேறு யாராக இருந்தாலும் உன்னை ஜெயிலுக்கு அனுப்பி வைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பார்கள் என்று சொன்னார். நாதன் ஓடிச் சென்று முத்து வேலுவின் கால்களில் பொத்தென்று விழுந்தான்.

ஐயா என்னை மன்னி த்துவிடுங்கள். வைரத் தைத் திட்டம்போட்டு நான் திருட வில்லை. காலையில் நிலம் துடைக்கும்போது உங்களது கதிரையினடியில் விழுந்து கிடந்த வைரத்தைக் கண்டேன். வைரத்தைப் பார்த்ததும் அதன்மேல் ஆசைகொண்டு விற்றுப் பணமாக்கலாம் என்ற பேராசையால்தான் பிழை செய்து விட்டேன் என்று சொல்லிக் கதறியழுதான். சரி நடந்தது போகட்டும் பிழைத்துப்போ. இனி யாவது திருந்தி நடக்கும் வழி



யைப்பார் என்று சொல்லிய முத்துவேலு இலாச்சியைத் திறந்து அவனது ஒருமாதச் சம்பளக் காசை எடுத்து எண்ணிக் கொடுத்தார். பின்னர். இளையதம்பியைப் பார்த்த முத்துவேலு இளையதம்பி தயவுசெய்து எனக்காக இவனை மன்னித்து விட்டு விடுங்கள் என்று கோரினார். முத்துவேலுவைப் பார்த்துச் சிரித்த இளையதம்பி. அது உங்களது இஷ்டம் மிஸ்டர் முத்துவேலு நீங்கள் புகார் எழுதிக் கொடுக்காமல் இவன் மேல் என்னாலும் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொன்னார்.

(தொடரும்)

# சொற்கோபுரம்

பூ
பூ னை
பூ ச ணி
பூ ஞ் சோ லை
பூ ங் கா ற் று

மேற்காட்டப்பட்ட சொற்கோபுரம் மாதிரி உங்களுக்கு விரும்பிய எழுத்தைப் பயன்படுத்தி வேறு சொற்கோபுரங்களை அமையுங்கள்.






சதுரத்தில் வெட்டப்பட்ட பகுதியில் பொருந்தக்கூடிய சரியான துண்டு எது?

# விடுகதைகளும் விடைகளும்

1. அக்காள் விதைத்த முத்து. அள்ள முடியாத முத்து - அது என்ன?
2. ஆட்டி விட்டால் ஆடும். அந்தரத்தில் தொங்கும் - அது என்ன?
3. இணைபிரிய மாட்டார்கள். நண்பர்கள் அல்ல. ஒன்றுசேரமாட்டார்கள். பகைவர்கள் அல்ல - அவை என்ன?
4. ஈக்கி ஈக்கி நெடும் ஈக்கி - அது என்ன?
5. உயிர் இல்லாத நீதிபதி. ஒழுங்காக நியாயம் சொல்கிறார் - அவர் யார்?

விடைகள்

1. கோலம் 2. ஊஞ்சல் 3. தண்டவாளம் 4. மழை 5. தராசு

# மூளைக்கு வேலை

1. சில நண்பர்களிடையே, ஆளுக்கு 2 பொம்மைகள் வீதம் கொடுத்தால், 5 பொம்மைகள் மீதமிருக்கும். ஆளுக்கு 3 பொம்மைகள் வீதம் கொடுத்தால், 5 பொம்மைகள் தேவைப்படும். நண்பர்கள் எத்தனை பேர்? பொம்மைகள் எத்தனை?

2. ஒரு சிறு கூண்டு. அதன் ஒவ்வொரு முனையிலும் ஒரு கரடிக்குட்டி உட்கார்ந்திருக்கிறது. ஒவ்வொரு கரடிக்குட்டிக்கும் எதிராக மூன்று கரடிக்குட்டிகள் உள்ளன. அதாவது ஒவ்வொரு கரடிக்குட்டியின் முன்னாலும், பின்னாலும் இன்னொரு கரடிக் குட்டி அமர்ந்திருக்கிறது. அப்படியென்றால் மொத்தம் எத்தனை கரடிக்குட்டிகள் அந்தக் கூண்டில் அமர்ந்து இருக்கின்றன?



## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1.

| | தலை | கால்கள் |
|---|---|---|
| ஆடுகள் | 16 | 64 |
| கோழிகள் | 64 | 128 |
| | 80 | 192 |

2.



இங்கே மடிக்கவும்



## ஒரே மாதிரியான இரண்டு குதிரைகளுக்கு வர்ணந்தீட்டுங்கள்



## கன்று தனது தாய்ப்பசுவை சென்றடைய வழிகாட்டுங்கள்



# நாட்டியம் ஆடிய ஒட்டகம்

காட்டில் விலங்குகள் அனைத்தும் கூடின. யானை எழுந்து விலங்குகளே! நாம் அனைவரும் மகிழ்ச்சியாக காலத்தைக் கழிக்க இங்கே கூடியுள்ளோம். ஒவ்வொருவராக உங்கள் கலைத் திறமையைக் காட்டுங்கள் என்றது.



குரங்கு ஒன்று விலங்குகளின் முன் வந்து நின்றது. சுழன்று சுழன்று நாட்டியம் ஆடியது. குத்துக்கரணங்கள் போட்டது. கிளைக்குக் கிளை தாவி தனக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாம் செய்து காட்டியது.



விலங்குகள் எல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்தன. ஒருவழியாக குரங்கின் ஆட்டம் முடிந்தது.

அதன் பின்னர் அங்கிருந்த ஒட்டகம் ஒன்று தானும் குரங்கைப் போலவே நாட்டியம் ஆடியது. அதனைப் பார்த்த விலங்குகள் ஓவென்று கூச்சல் எழுப்பின. குரங்கைப் போலவே குத்துக்கரணம் போட முயன்றது ஒட்டகம்.

அப்போது வயதான மான் எழுந்து 'ஒட்டகமே உனக்கு எது முடியுமோ அதனைச் செய். அதுதான் ரசிக்கக்கூடியதாக இருக்கும்' என்றது. ஒட்டகம் வெட்கத்துடன் போய் அமர்ந்து கொண்டது.

# கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

"கர்த்தர் எந்தன் மேய்ப்பர் எனக்கொன்றும் குறைவில்லை..." என்ற பாடல் ஓசையைக் கேட்டதும் லக்கி குருவியும், பிரெளனி குரங்கும் திரும்பிப் பார்த்தன.

ஸ்வெட்டர் மப்ளருடன் ஜானி முயல் உள்ளே நுழைந்து கொண்டிருந்தது. "இந்தக் குளிரிலும் உனக்கு நன்றாகப் பாட வருகிறதே! இந்தச் சூடான தேநீரைக் குடி" என்றது லக்கி.

"கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருக்கிறதே அது தான் பாட்டுப் பாடி, பயிற்சி செய்கிறேன். பிரெளனி இந்தக் கிறிஸ்மஸ்சை எப்படிக் கொண்டாடப் போகிறோம்" என்று கேட்டது ஜானி. "நாங்கள் மூன்று பேரும் சம்பாதித்து சேர்த்து வைத்த பணத்தில் ஆளுக்கொரு புது உடுப்பு வாங்கலாம். மீதிப் பணத்தில் ஐந்து பேருக்கு ஸ்வெட்டர் கம்பளி வாங்கிக் கொடுக்கலாம்" என்று தன் திட்டத்தை அறிவித்தது பிரெளனி.

"கிறிஸ்மஸ் அன்று காலை நண்பர்களை அழைத்து, பிரேயர் வைத்து விட்டு, இனிப்புப் பண்டங்கள் வாங்கிக் கொடுக்கலாம்" என்று லக்கி

அப்போது சோம்பேறி எலி ஜோன் உள்ளே வந்தது. "லக்கி எனக்கும் கொஞ்சம் தேநீர் கொடு, நானும் உங்கள் கதையில் கலந்து கொள்கின்றேன்" என்றது.

"தேநீர் வேண்டுமானால் குடி. நாங்கள் கதைத்து முடித்து விட்டோம்" என்று தேநீரை நீட்டியது லக்கி.

"என்ன கதைத்தீர்கள் புதிதாக யோசிக்கவே மாட்டீர்களா? இந்தக் கிறிஸ்மஸ்சிற்கு புரியாணி செய்தால் என்ன" என்றது ஜேன்.

லக்கி, பிரெளனி, ஜானி மூன்றும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

"என்ன யோசிக்கிறீர்கள் நாங்கள் நாலுபேரும் ஆளுக்கொருவேலையைச் செய்வோம். புரியாணியை செய்து நான்கு பங்காக்கி எடுத்துக் கொள்வோம்" என்றது ஜான்.

"சரி ஏதோ உருப்படியான யோசனை சொல்லியிருக்கிறாய் யார் யாருக்கு என்ன வேலை" என்றது லக்கி.

"பிரெளனி நீ அரிசி கொண்டு வா, லக்கி நெய் கொண்டு வா, ஜானி காய்கறிகள் கொண்டு வர வேண்டும். நீ என்ன செய்யப் போகிறாய்" ஜோன் "அவசரப்படாதே தண்ணீரும் விறகும் என் பெறுப்பு சரியா".

ஓ. சரி குட் நைட்.

***

கிறிஸ்மஸ் அன்று அதிகாலையில் அனைவரும் குளித்துப் புத்தாடை அணிந்து கொண்டனர்.

லக்கி, பிரெளனி, ஜானி நண்பர்கள் உறவினர்களுடன் பிறேயரை முடித்துக் கொண்டு எல்லோருக்கும் இனிப்புக்கள் வழங்கின.

லக்கி அரிசியுடன் காத்திருந்தது. பிரெளனி நெய்யும், ஜானி கரட், கோவா, லீக்ஸுடன் வந்து சேர்ந்தன.

"நேரம் போகுது; எங்கே இந்தச் சோம்பேறி ஜோன் விறகும், தண்ணீரும் இருந்தால் தானே சமைக்க முடியும்."

சிறிது நேரத்தில் வந்த ஜோன், "நண்பர்களே என்னை மன்னியுங்கள். முழங்கால் வலி, அதுதான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியவில்லை"



"பிரெளனி நீ இந்தப் பொருட்களுக்கு. காவல் இரு நான் தண்ணீர் கொண்டு வருகிறேன். ஜானி விறகு கொண்டு வா" என்று புறப்பட்டது லக்கி.

சிறிது நேரத்தில் புரியாணி செய்யும் வேலை தொடங்கியது. மூன்றும் கதைத்துக் கொண்டே வேலை செய்தன.

"லக்கி மிகவும் நன்றாகப் புரியாணி செய்திருக்கிறாய். சூப்பர்."

"வீட்டில் உறவினர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள். அவரவர் பங்கை எடுத்துச் சென்று கிறிஸ்மஸ் விருந்து கொடுக்கலாம்" என்றது லக்கி சந்தேசத்துடன்.

மூன்று பாத்திரங்கள் வந்து சேர்ந்தன.

"பிரெளனி நாலு பங்காக வை" என்றது ஜோன்.

"சரி அரிசி கொண்டு வந்த லக்கிக்கு ஒரு பங்கு. காய்கறி கொண்டு வந்த ஜானிக்க ஒரு பங்கு. நெய் கொண்டு வந்த எனக்கு ஒரு பங்கு. மீதி ஒரு பங்கில் எனக்கும்போடு பிரெளனி" என்றது ஜான்



"தண்ணீரும் விறகும் யார் கொண்டுவந்தது" என்று கேட்டது ஜானி.

"நீங்கள் தான்" என்றது ஜோன். "அப்படி யென்றால் இதை மூன்று பங்காகப் பிரிப்பது தானே நியாயம்" என்றன பிரெளினி, லக்கி, ஜானி.

"நான் தான் ஐடியா கொடுத்தேன்" என்றது ஜோன்

"இவ்வளவு நேரம் வாசனை பிடித்ததே ஐடியாவிற்குச் சரியாகப் போய் விட்டது. எந்த வேலையையும் செய்யாமல், சாப்பிட வேண்டும் என்று நினைக்காதே ஜோன். அவரவர் உழைப்பில் சாப்பிடும் கூழ் அமிர்தத்திலும் மேலானதென்று கர்த்தரே சொல்லியிருக்கிறார் என்று தெரியுமா?" என்றது லக்கி .

"என்னை மன்னித்துக் கொள் லக்கி நான் வாறேன்."

"நீ சோம்பேறியாக இருந்தாலும் எங்கள் நண்பன் தான் இந்தப் பங்கை எடுத்துக் கொண்டு போ" என்றன மூன்றும் ஒரே குரலில்.

கிறிஸ்மஸ் தினத்திலிருந்து ஜோன் புதுப்பிறவி எடுத்தது.

இங்கே மடிக்கவும்



# அண்ணாவும் தங்கையும்

## பச்சை விறகு எரிவதில்லை ஆனால் காய்ந்த விறகு எரிவதேன்?



அம்மா சமையலறையில் சமைத் துக் கொண்டிருந்தார். அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந் தது. குழலிக்கு பாடசாலை விடு முறையான படியால், அம்மாவுக் குச் சிறு சிறு உதவிகள் செய்து கொண்டிருந் தாள்.

சிறிது நேரத்தில் அடுப்பி லிருந்து புகை வந்தது. அடுப்பைப் பார்த்தார் அம்மா. விறகு எரிந்து முடியும் தறுவாயில் இருந்தது.

**அம்மா:** குழலி! அடுப்பு நூரப் போகுது. இரண்டு விறகுக்கட்டை எடுத்து அடுப்புக்குள்ளவை.

பின் விறாந்தையில் இருந்த இரண்டு விறகுகளை எடுத்து வந்து, அடுப்பிற்குள் வைத்தாள் குழலி. விறகுகள் பச்சையாக இருந்தன. மழையென்ற படியால் அம்மா விறகுகளைக் காய வைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டு, அவற்றை அடுப்பிற்குள் வைத்தாள். ஆனால் அவை எரிவதற்கு கஷ்டப்பட்டன. ஊ...ஊ... என்று ஊதிப் பார்த்தாள். எரியவில்லை. ஆனால் அடுப்பிலிருந்து வந்த புகை குழலியுடைய கண்களில் கண்ணீரை வரவழைத்தது. கண்களைக் கசக்கிக் கொண்டாள்.

**குழலி:** அம்மா விறகு எரியுதில்லை.

**அம்மா:** நீ இங்கால வா. நான் எரிக்கிறன். (குழலியைத் தேடிக் கொண்டு சமையலறைக்குள் சங்கர் வந்தார்)

**சங்கர்:** என்ன குழலி? ஏன் கண்ணக் கசக்கிறாய்?

**குழலி:** புகை கண்ணுக்க போய் விட்டுதண்ணா.

**சங்கர்:** விறகு பச்சையா இருக்கு. அதுதான் எரியாமல் புகை வருகிறது.

**குழலி:** பச்சை விறகு எரியமாட்டுதா அண்ணா?

**சங்கர்:** இல்லை குழலி. தாவர செல்களிலுள்ள பகுதிகளில் 90 சதவீதம் நீர் உள்ளது. இதனால் பச்சையான தாவரப் பகுதிகள் விரைவில் எரிவதில்லை. செல்களிலுள்ள நீர் குறையக் குறைய தாவரப் பகுதிகள் காயத் தொடங்குகிறது. நீரில்லாத செல் பகுதிகள் விரைவில் எரியக் கூடியவையாக மாறுகிறது. அதனால்தான் வீடுகளில் பச்சைத் தடிகளை வெட்டி வெய்யிலில் காய வைக்கிறார்கள்.

**குழலி:** வெயிலில் நன்றாகக் காய்ந்த பின்னர் எடுத்து அடுப்புப் பற்ற உபயோகிக்கிறார்கள்.

**சங்கர்:** சரியாகச் சொன்னாய் குழலி

**குழலி:** ஆனால் அண்ணா எனக்கொரு சந்தேகம்?

**சங்கர்:** என்ன சந்தேகம் குழலி . கேள் சொல்லுறன். அவுஸ்ரேலியாவில் சில மாதங்களுக்கு முன்னர்

**குழலி:** பெரும் காட்டுத்தீ பரவியதாக கேள்விப்பட்டனான். காட்டில் பச்சை மரங்கள் நிறைய இருக்கும். பெரிய மரங்களும் இருக்கும். பச்சையான தாவரப்பகுதிகள் விரைவில் எரிவதில்லை என்று சொன்னீர்கள்? ஆனால் அவை எப்படி எரிந்தன.?



**சங்கர் :** அதிகமான வெப்பத்தாலேயே பச்சையான தாவரப்பகுதிகளும் எரிந்து போகிறது. அதனால் தான் காட்டுத் தீயில் பச்சையான பெரு மரங்கள் கூட எரிகட்டையாக மாறி, காட்டுத் தீ பரவ உதவுகின்றன.

**அம்மா:** சரி இனி அண்ணாவும் தங்கையும் கதைய நிப்பாட்டிப் போட்டு சாப்பிட வாங்கோ. சமையல் முடிஞ்சுது.

# நாம் வாழும் உலகம்

மனிதனுடைய கண்கள் மிகவும் சுலபமாக ஏமாற்றப்படக் கூடியவை. ஆனால், புகைப்படக் கருவியால் எடுக்கப்படும் படங்கள் நிரந்தரமாகப் பதியப்படக் கூடியவை. அவற்றை ஆய்வு கூடத்திலிருந்து ஆறுதலாகப் பலர் சேர்ந்து பரிசீலனை செய்யலாம்.

தற்கால வானிலை ஆராய்ச்சிகள் யாவும், அநேகமாகப் புகைப்படக் கருவிகள் மூலமே நடத்தப்படுகின்றன. மேலும் சூரியனைப் பற்றிய ஆராய்ச்சிகளும், சூரிய கிரகணங்களின் போது நடத்தப்படும் பரிசோதனைகளும் தொலைநோக்கி மூலம் வெறும் கண்களால் பார்த்தால், கண் பார்வை கெட்டுவிடும் என்பதால், புகைப்படங்கள் மூலமே ஆய்வு செய் யப்படுகிறது.

இந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ரேடியோத் தொலைநோக்கிகளின் உதவியால் விண்ணியல் மேலும் முன்னேறியிருக்கிறது. தற்காலத்தில் விண்ணிற் செலுத்தப்படும் செயற்கைக் கிரகங்களைக் கண்டுபிடிப்பதற்கும், இவை மிகவும் பயன்படுகின்றன. எல்லாவற்றுக்கும் சிகரமாகக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் மனிதர்களைக் கொண்டும், மனிதர் இல்லாமலும் விண்வெளிக்கு செயற்கைக் கிரகங்கள் ரொக்கட்டுக்களை அனுப்பின. இவை பல மைல்களுக்கு அப்பால் சென்று, பூமியைப் பலமுறை வலம் வந்து பின் பூமியிலிறங்கியதும் சந்திரனுக்குச் சென்று அதன் தரையில் இறங்கி ஆராய்ச்சிகள் செய்து பின் மீண்டும் பூமியை வந்தடைந்தன.

மேலும் சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி போன்ற கிரகங்களுக்கு அண்மையில் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தறிந்தும் அரும் பெருஞ் சாதனைகளாகும்.



# தவறிய வால்களைக் கண்டு பிடியுங்கள்

காட்டில் விலங்குகள் சோகமாக அமர்ந்திருந்தன. அதற்குக் காரணம், அவற்றின் வால்களைக் காணவில்லை. உரிய வால்களைக் கண்டுபிடிக்க உதவுங்கள்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

திருக்குறள்

# நமது நோக்கு

## புத்தாண்டிற்கான சங்கற்பம்

மகிழ்ச்சியும், மலர்ச்சியும் அற்ற சூழலில், இழப்புக்களின் சோகமும், எதிர்காலம் குறித்த அச்சமும் மக்களை ஓர் இருள்மயமான நிலைக்குத் தள்ளியுள்ள சூழலில் இன்று புதிய 2005 ஆம் ஆண்டு தன் முதலடியை ஆரம்பிக்கிறது.

ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்களுடனும், சமாதானம் குறித்த நம்பிக்கை மற்றும் வளமான எதிர்காலம் குறித்த கனவுகள் ஆகியவற்றுடன் கடந்த ஆண்டு ஆரம்பித்தபோது மகிழ்ச்சிப் புன்னகையுடன் அதை மங்கலம்பாடி வரவேற்ற எம் மக்கள், இவ்வளவு பெரிய சோகத்தையும், பேரழிவையும் மட்டுமே வெகுமதியாக வழங்கிவிட்டு அது ஏமாற்றிச் செல்லும் என எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள்.

சோகமயமான கறுப்புத்தினத்துடன் 2004 ஆம் ஆண்டு தன்னுடைய இறுதிக் கணங்களை முடித்துக்கொண்டது துயரமான விடயமேயாகும்.

முடிந்துபோன ஆண்டு குறித்த மீள்பார்வை என்பது ஆறாக்காயத்தைச் சுரண்டி ரணமாக்கித் துன்புறும் செயலாகவே இருக்கும். என்றாலும், அதைச் சுலபமாக மறக்கவும் முடியாத ஒன்றேயாகும்.

சென்ற ஆண்டின் தொடக்கத்தில் மீளத் தொடரும் எதிர்பார்ப்புகளுடன் இருந்த சமாதானப் பேச்சுவார்த்தை நகர்வு முயற்சிகள் இடையில் நடைபெற்ற ஆட்சிக் கலைப்பு மற்றும் பொதுத் தேர்தல் முடிவுகள் காரணமாக ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக நிரந்தரமாக ஸ்தம்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது துரதிஷ்டமேயாகும்.

சமாதான எதிர்ப்பாளர்களான பேரினவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து - ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிய சமாதானத்துக்கான யுத்தக் கோட்பாட்டின் மூலவரான ஜனாதிபதி, மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடரப் போவதாக மக்களை நம்பவைத்தபோதும் அவரால் அது தொடர்பாக ஒரு நூலிழைதானும் - ஆக்க பூர்வமான நகர வெதனையும் மேற்கொள்ளமுடியாமல் போனமைக்கு, சமாதானம் மீது அவருக்குள்ள விசுவாசமின்மையே காரணமாகும்.

விடுதலைப் புலிகள் சர்வதேச ஆலோசனையுடனும் நிபுணத்துவ அனுசரணையுடனும் தயாரித்த இடைக்கால நிர்வாக அதிகாரசபைக்கான திட்ட வரைபானது அரச தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், அது நியாயபூர்வமான தமிழர் தரப்புக் கோரிக்கையாக இருந்தபோதும், அரசு அதைச் சமாதான நல்நோக்குடன் பரிசீலித்து முடிவெடுக்கும் மனோபாவம் கொண்டதாக இருக்கவில்லை. மாறாக மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கும் உள்நோக்குடன்தான் தனது அரசியல் மற்றும் இராணுவ மூலோபாயங்களை வகுத்து வந்தமையால், மீண்டும் போர் குறித்த அச்சத்தையே கடந்த ஆண்டு மக்கள் மத்தியில் விதைத்ததெனலாம்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சமாதான எதிர்ப்பு சக்திகளான சி.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டணியை தென்பகுதி மக்கள் ஆட்சி பீடத்தில் அமர்த்தியதன் மூலம் அவர்களும் தங்களுக்கு சமாதான மீதான எதிர்ப்பும் - வெறுப்புமே உள்ளதென நிரூபித்தார்கள் என்றே கருதவேண்டியதாயிற்று. அதேவேளை வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கொள்கைகளை முற்றும் முழுதாக ஏற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 22 பேரை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்து தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டுணர்வை உலக சமூகத்திற்கு ஜனநாயக ரீதியில் உறுதியாக உணர்த்தினார்கள். இதுவே கடந்த ஆண்டின் குறிப்பிடத்தக்க முக்கிய சம்பவமாகும்.

இந்த செய்கை மூலம் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகள் அனைத்தையும் தமிழ் மக்கள் முழுமையாக நிராகரித்து, விடுதலைப் புலிகளுக்கான தமது ஒட்டுமொத்த ஆதரவையும், அவர்கள்மீதான முழுமையான நம்பிக்கையையும் வெளிப்படுத்தினர் என்றே கூறவேண்டும்.

இந்திய - இலங்கை உடன்பாடு, அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு உடன்பாடு, சீனாவிலிருந்து ஆயுதக் கொள்வனவு, அமெரிக்கா யுத்தக் கப்பலை இலங்கைக்கு வழங்கியது, இந்திய - இலங்கை கூட்டுக் கடற்படைப் பயிற்சி... என சமாதானத்தை முற்றிலும் கேள்விக்குறியாக்கிய - சமாதானம் மீதான நம்பிக்கையை முற்றிலும் இழக்கவைத்த... போரா? சமாதானமா? என்ற கோஷத்தை எழுப்பவைத்த நிகழ்வுகள் இலங்கையின் அரசியல் ஸ்திரமின்மையின் விளைவாக ஏற்பட்ட அனர்த்தங்களாகும்.

இந்த அரசியல் அனர்த்தங்கள் இலங்கையை மற்றொரு யுத்தப் பேரழிவை நோக்கி வேகமாக நகர்த்திச் செல்வதாகவே உணரப்பட்டுள்ளது.

சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச வல்லாதிக்க சக்திகள் போருக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கும் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கும் சுய அரசியல் மற்றும் இராணுவ நலன் நோக்கில் உதவுவதுதான் முரண்நகையான விடயமாகும்.

இந்த வகையில் மூன்றாண்டுகால போர்நிறுத்தம் கடந்த ஆண்டில் எந்த நன்மையையும் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தராத நிலையில் சமாதான ரீதியில் அரசியல் தீர்வொன்றைக்காண அரசு முன்வராது என்பது உறுதியான நிலையில் மனம் தளர்ந்திருந்த மக்களை 'சுனாமி' கடல் கொந்தளிப்பு அனர்த்தம் துவம்சம் செய்து பேரழிவுக்குள்ளாக்கிய நிலையில், அந்தக் கொடூர நிகழ்வின் பீதியும், அச்சமும் இன்னமும் தொடரும் சூழலில், இன்றைய - புத்தாண்டின் புதிய நாள் மௌனத்துயருடன் பிறக்கிறது.

போரழித்த மக்களை இப்போது நீரழித்துள்ளது. எல்லாவகையிலும் கொடூரமான இழப்பின் அவலங்களுள் சிக்கி அல்லலுறும் எம் மக்களை மீண்டும் இயல்பு வாழ்வுக்குக் கொண்டுவரவேண்டிய கடமை எங்களுடையதாகும்.

அதைப் புரிந்துணர்வுடனும், அர்ப்பணிப்புடனும் மேற்கொள்வதே எமக்கான புத்தாண்டு இலட்சியமாகட்டும்.

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி'யார் பார்வையில்...**

# புலிகளின் பாதுகாப்பும் போர் நிறுத்தப் பயனும்!

இயற்கை திடீரென்று சீறிப்பாய்ந்து இவ்வளவு பேரழிவுகளை ஏற்படுத்துவதற்கு என்ன காரணம் என்று தெரியுமா?

நன்கு பழுத்த ஒரு முதியவர் இப்படி ஒரு கேள்வியை வழிமறித்துக் கேட்டார்.

எனக்குத் தெரியவில்லை. நான் அறிந்தவரையில் வேறு எவரும் இந்தக் கேள்விக்குப்பதில் சொன்னதாகவும் தெரியவில்லை என்றேன்.

இது இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இயற்கைக்கும் செயற்கைக்கும் இடையிலான போட்டி. 'யார் கொலோ சதுரர்?' என்ற போட்டி நடந்துகொண்டிருக்கிறது என்றார் அவர்.

யார் கெட்டிக்காரர் என்ற போட்டி இயற்கைக்கும் செயற்கைக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பெரும் முன்னேற்றத்தைக் கண்டுவிட்டதாகவும், சாதனைகள் செய்வதாகவும் கூறிக்கொண்டிருக்கிறீர்கள், சந்திர மண்டலத்துக்குப் போகிறீர்கள். பரிசோதனைக்கு செயற்கைக்கோள்களை அனுப்புகிறீர்கள். சந்திரனில், செவ்வாயில் மனிதன்போய் குடியேறலாமா என்று ஆராய்கிறீர்கள்.

சமுத்திரத்தின் ஆழத்திலும் ஆராய்ச்சி செய்கிறீர்கள். புயல் உருவாவதைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்கள்.

கிரகங்கள்மீதான உங்கள் படையெடுப்பும் விண்ணிலும் மண்ணிலும் நீருக்கடியிலும் நீங்கள் நடத்தும் ஆராய்ச்சிகளும் இயற்கையை மாசுபடுத்தவில்லையா? சுற்றுப்புறத்தையும் வெளி உலகையும் மாசுபடுத்திவிட்டு சுற்றுப்புறப்பாதுகாப்புப்பற்றி அறிவுரை கூறுகிறீர்கள்.

நீங்கள் விஞ்ஞானத்தில் வெற்றிபெற்றிருக்கலாம். ஆனால் இயற்கையின் சீற்றத்தைத் தடுத்து பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களை உங்களால் பாதுகாக்க முடியாமல் போனது ஏன் என்று கேட்கிறார் முதியவர். அவருக்கென்ன பதில் சொல்வது?

தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தத்தில் மாண்டுபோன உல்லாசப் பயணிகள் சிலரின் கைவிரல்களிலிருந்து மோதிரங்களைக் களவாடுவதற்காக விரல்களைக்கூட வெட்டி எடுத்திருக்கும் கள்ளர்களைப்பற்றி காவல்துறையினர் கவலையுடன் கண்டனமும் தெரிவிக்கின்றனர்.

இயற்கை அனர்த்தத்தில் மாண்டவர்களைத் தேடி அலையும் உறவினர்களை ஏமாற்றித் தட்டிப் பறிக்கும் கூட்டமும் ஆபத்தில் உதவுபவர்கள்போல் நடித்து அகப்பட்டதைச் சுருட்டுபவர்களும் இந்த அவலமான நிலையிலும் தங்கள் கைவரிசையைக்காட்டி விடுகின்றனர்.

காலியில், கரப்பிற்றியா மருத்துவமனைக்கு வெளியே அனர்த்தத்தில் மாண்டவர்கள் பலரின் சடலங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

அனர்த்தத்தில் காணாமற்போன தங்கள் உறவினர்களைப் பல இடங்களிலும் தேடி அலைந்தும் காணாதவர்கள் கடைசியில் கரப்பிற்றியா மருத்துவமனையில் சடலங்களாவது கிடக்கின்றனவா என்று பார்ப்பதற்குக் கூடுகின்றார்கள்.

இங்கு தங்கள் உறவினர்களின் சடலங்களை அவர்கள் அடையாளம் காட்டியதும், 'பிணம் காக்கும் சில கழுகுகள்' அந்தச் சடலங்களை விரைவாக எடுத்துத் தருவதற்கு ஒரு சடலத்திற்கு ஐயாயிரம் ரூபாய் என்று பணம் அறவிடுகிறார்களாம். இந்தச் சடலங்கள் மேலும் கெட்டுப்போகாமல் எடுத்துச் சென்று இறுதிச் சடங்கு செய்யவிரும்பும் உறவின்ர்கள் அந்தக் 'கழுகுகளுக்கு' ஐயாயிரம் ரூபாய் கொடுத்து பின்னர் சடலத்தை எடுத்துச் சென்றனராம்.

இந்த அவல நிலையிலும் மாண்டவர் உடல்களிலிருந்து நகைகளை அபகரித்துச் செல்பவர்களையும் பிணத்தைவைத்து வியாபாரம் செய்பவர்களையும் என்னவென்று சொல்வது?

'கட்டியழும்போதும் பிணத்தைக்
கட்டியழும்போதும், பணப்
பெட்டிமேலே கண்வையடா
தாண்டவக்கோனே' என்ற குதம்பைச் சித்தர் பாடல்வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

ஆபத்தில் உதவிக்குச் சென்றவர்கள் சிலரும் அனர்த்தத்தில் பலியான செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன.

கல்குடா இராணுவமுகாம் கொமாண்டர் கேணல் லயனல் கருணாரத்ன, முப்பத்தைந்து அடி உயரத்தில் சீறி எழுந்துவந்த பயங்கரப்பேரலையிலிருந்து தமது 13 வயது மகன் தனஞ்சயனைக் காப்பாற்ற எத்தனித்தபோது அலையில் அள்ளுண்டு மாண்டு போனார். அவரது மனைவியும் மகள்களும் உயிர்தப்பிவிட்டனர். இத்தகவலை அவரது சாரதி தெரிவித்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்யப்போகிறோம் என்று கையில் சில பொருள்களை எடுத்துக் கொண்டு வேடிக்கை பார்க்கும் சிலர் கூட்டமாகச் சென்று உதவி செய்யும் பொதுத் தொண்டர்களுக்கும் படையினருக்கும் உபத்திரவமாக இருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

இத்தகையவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களில் வேடிக்கை பார்ப்பதற்காகவும் அகப்பட்டதைச் சுருட்டுவதற்காகவும் 'உதவி' என்ற பெயரில் சிலர் கொண்டுவரும் பொருள்களையெல்லாம் அவர்கள் நேரடியாகக் கொண்டுசெல்லாமல் அதற்கென முறையாக விநியோகிக்கும் அமைப்பிடமே கொடுக்கும் நடவடிக்கையை விடுதலைப்புலிகள் ஆரம்பத்திலேயே எடுத்துள்ளனர்.

இப்பொழுதுதான் தென்னிலங்கையில் இதே முறையினைப் பின்பற்றி பொருள்களை அதற்கென அமைக்கப்பட்டிருப்போரிடம் கொடுக்கும்படி அறிவுறுத்துகின்றனர்.

'அழுவார், அழுவாரெல்லாம்
தன் கரைச்சல்
துருவன் பொண்டிலுக்கு அழ
ஆளில்லையாம்'
என்று ஊரில் சிலருடைய செயல்பற்றிச் சொல்வார்கள்.

இயற்கை அனர்த்தம் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது. எவர் எவர் எப்படியெப்படியெல்லாமோ தங்களால் முடிந்த உதவியைச் செய்வதற்கு ஓடினார்கள்.

விடுதலைப்புலிப் போராளிகளை இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளின்றிச் சகல பகுதிகளுக்கும் தலைவர் பிரபாகரன் அனுப்பினார். அரசு சாரா நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரது உதவியையும் அவர் கோரினார். உதவிக்கு ஓடோடி வந்தனர்.

எங்கேயோ வசதியாக உட்கார்ந்து விடுதலைப் புலிகள் அரசின் உதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தலைவர்' என்ற 'முத்திரை'யோடு சங்கரியார் அறிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்.

அவர் அம்மையாருக்கு கடிதம் எழுதினாலும்சரி வேறு யாருக்கு எழுதினாலும்சரி அவை போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போகிறதோ இல்லையோ பத்திரிகைகளுக்கு, ஊடகங்களுக்குப் போய்ச்சேர்ந்து சிலவற்றில் வெளிவந்துவிடுகின்றன. இது போதுமே!

# அழிவுகளை சந்தித்துள்ள வடபகுதி மக்களுக்கு பல்வேறு அமைப்புக்கள் உணவுப் பொருட்கள்

கடற்பூகம்பத்தால் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ள வடபகுதி மக்களுக்கு வழங்குவதற்கென தென்னிலங்கைச் சகோதரர்களாகலும், பல்வேறு அமைப்புக்களாலும், ஊடகத்துறையினராலும் பெருமளவு உணவுப் பொருட்கள் வந்து குவிந்தவண்ணமுள்ளன.

அனைத்து உடமைகளையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு வழங்குவதற்காக, கொண்டு வரபபட்ட பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அந்தந்த அமைப்புக்களே நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதன்மூலமாக உதவிக்கரம் நீட்டிவந்த தென்னிலங்கை வாழ் உறவுகள் - பாதிக்கப்பட்ட மக்களுடன உரையாடி, அவர்களின் உணர்வுகளை, வேதனைகளை அறியவும், நேரில் காணவும் பெரிதும் வாய்பபாக அமைந்துள்ளது.

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொழும்பு பல்கலைக்கழகம், நெஸ்பிறே கம்பனி மற்றும் அம்மன் களஞ்சியம், அநுராதபுரம் விவேகானந்தா சபை, இந்துமா சபை கொழும்பு, சக்தி எப.எம் ரூபவாஹினி, தேசிய திரைப் படக் கூட்டுத்தாபனம், மகாஜனா சனசமூக நிலையம் - ஆனைக் கோட்டை, நாத்தாண்டியா சிறி ஐயனார்கோவில் பரிபாலனசபை, மானிப்பாய் பரிஸ், லியோகழகம் போன்ற அமைப்புகளும் க.மயில் வாகனம் 5 லட்சம் ரூபா, வன்னி பொறியியலாளர் கம்பனி ஒரு லட்சம் ரூபா வழங்கியுள்ளனர்.

பல அமைப்புக்கள் தென்னிலங்கையில் இருந்துவந்து வடபகுதி மக்களுக்கு உதவிப்பொருட்களை வழங்கியுள்ளனர். மற்றும் தாயகத்தின் உள்ளூர் அமைப்புக்கள், கிராம மக்கள் உட்பட பல தரப்புக்களும் உதவிப் பொருட்களைக் கொணடுவந்து மக்களுக்கு வழங்கி வருகின்றனர். மனிதாபிமான அடிப்படையில் துன்பப்பட்ட மக்களுக்கு உதவிவரும் அனைத்து அமைப்புக்களுக்கும், அதன் பிரநிதிகளுக்கும், தென்னிலங்கை சகோதரர்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழ் மக்கள் சார்பில மனம் நிறைந்த அன்பையும், நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துளளது.

# மருதநகர் அம்மன் பூசகரும் பலியானார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத நகர் அம்மன் ஆலயப் பூசகர் அமாவாசி என்பவரும், பேரலை அனர்த்தத்தில் பலியானார். பல ஆண்டுகளாக அம்மன் அருளால் தீராத நோய்களைத் தீரதவர். வைத்திய ரீதியாகத் தீர்க்கப்படாத மர்ம நோய்களையும் தீர்த்தவர். தீராக் கவலையால் மனம் நொந்து இவரிடம் சென்றவர்கள் புதிய வாழ்வைப் பெற்றுள்ளனர். இதனால் அம்மன் பக்தர்கள் பெருங்கவலை அடைந்துள்ளனர்.

முல்லைத்தீவுக்குத் தனது மகளைப் பார்க்கச்சென்றபோதே, கடலலையில் சிக்கி இவர் பலியானார். அன் னாரின் இறுதிக் கிரியைகள் மருத நகரில் நடைபெற்றது.

# கடற் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மலையக மக்களினால் உதவிப் பொருட்கள்

கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென மலையகத் தோட்ட தொழிலாளர்களாலும், மலையக தொழிலதிபர்களாலும், மலையக மக்கள் முன்னணியினராலும், மலையக ஆலயங்களின் நிர்வாகத்தினர்களாலும் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதிப் பொருட்கள் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டு ஒப்படைக்கப் பட்டுள்ளன.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 நலன்புரி நிலையங்களிலும், கிளிநொச்சியில் 13 நலன்புரி நிலையங்களிலும் பராமரித்து வரும தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் மலையகச் சகோதர உறவுகளின் நிவாரணப் பொருட்கள் ஒப்படைக் கப்பட்டன.

இந்தப் பொருட்களை உத்தியோகபூர்வமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரதிநிதி இரா.சுரவியிடம் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் வழங்கினார். பல வாகனங்களில் உதவி நிவாரணப் பொருட்களுடன் வருகை தந்த மலையகத் தலைவர்களும், முக்கிய பிரதிநிதிகளும் நிவாரணப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகளிடம் கையளித்தனர்.

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தம்மாலான உதவிகளை மலையக தோட்டத் தொழிலாளர்களும், வர்த்தகர்களும் வழங்கினார்கள். தமது ஒரு நாள் வேதனத்தை இதற்காக அந்த மக்கள் மிகுந்த விருப்புடன் தந்துதவினர். இந்தப் பொருட்களின் பெறுமதியை விட மலையக மக்களின் அன்பு பெரிது. மலையக மக்களுக்கும், ஈழத்தமிழ் உறவுகளுக்குமான உறவுப் பாலமாக இந்துபணியும், பணமும் அமையும். அத்தோடு இரத்ததானம் செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரிக்கவும் தயாரான நிலையில் மலையக இளைஞர்கள் 100 இற்கும் மேற்பட்டவர்கள் எம்மோடு வந்துள்ளனர்.

தொடர்ந்தும் எமது உறவுகளுக்கு உதவ வருவோம், என்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

தருணம் பார்த்து, தேவையுணர்ந்து உதவியதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதி இரா. சுரவி - மலையக மக்களுக்கும், மலையக மக்கள் முன்னணித் தலைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

# திருமலையில் மூவின மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

திருகோணமலை மாவட்டத்தில் கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்டு, அழிவுற்றுள்ள குச்சவெளிப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் உடனடி மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்தப் பிரதேசத்தில் 610 முஸ்லிம் குடும்பங்களும், 200 சிங்களக் குடும்பங்களும், 198 தமிழ்க் குடும்பங்களும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன.

இவர்களுக்கான மருத்துவம், உடுபுடவை, பால்மா, உணவு போன்ற உடனடி மனிதாபிமானச் செயற்பாடுகளும், இன மத வேறுபாடு இன்றி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த இயற்கை அனர்த்தத்தால் வீதிகள் பாழடைந்துள்ளதால், மக்கன் போக்குவரத்துக்கு சிரமப்படு வதைக் கருத்திற்கொண்டு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அந்த வீதிகளைச் சீர்செய்வதற்காக செயற்பட்டு வருகிறன்றமை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மக்களின் உடனடித் தேவைகளுக்கான பால்மா, மருத்துவம, உல் உணவு போன்ற பொருட்கள் திருகோணமலை மாவட்ட கோமரக்கடவை சிங்கள பிரதேச செயலரிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்டியால் கையளிக்கப்பட்டது.

அந்தக் கிராமத்தில் நான்கு முகாம்களில் 500 குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களுக்கான மேல்திக உதவிகளைச் செய்வ தற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையிடம் நிதி கையளிப்பதைப் படத்தில் காணலாம்

# கிளிநொச்சி நகரின் இன்றைய நிலை

நாளாந்த அலுவல்களுடன் சுறுசுறுப்பாக இயங்கிவந்த கிளிநொசசி நகரம், கடந்த 26 ஆம் திகதி ஞாயிறறுக்கிழமையில் இருந்து சோகமயமாகியது. அன்றையதினம் பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு வந்தவர்களால் கிளிநொச்சி வைத்தியசாலை நிரம்பி வழிந்தது. காயம் அடைந்தவர்கள் ஒருபுறம், சடலங்கள் மறுபுறம் கிளிநொச்சி நகரம் சோகத்தின் உச்சிக்கே சென்றுவிட்டது. உறவுகளைப் பிரிந்து கதறுபவர்களின் குரல்களைக் காதுகொடுத்துக் கேட்க முடியாதிருந்தது.

காயமடைந்த சிறுவர்கள், குழந்தைகள், பெண்களைக் கண்டதும் மக்கள் மனம் குழம்பத் தொடங்கினார்கள். குறிப்பாகச் சிறுவர்கள், குழந்தைகளின் சடலங்களைக் கண்டதும் பலர், கண்கலங்கி அழத் தொடங்கி விட்டார்கள். பச்சிளங் குழந்தைகளின் உடல்கள் கைகளை அசைப்பதுபோலக் கிடந்தன. பொம்மைகள்போலக் காட்சியளித்ததாகக் கண்ணீர் மல்கச் சொன்னார்கள். கிறிஸ்மஸ் புத்தாடைகளுடன் இளம் பெண்களின் சடலங்கள் கிடந்தமை சகிக்கவும், மறக்கவும் முடியாததொன்றாகும்.

தனிநபரில் இருந்து, ஸ்தாபனங்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சகல அமைப்புகளும் புலிகளின் கட்டமைப்புடன் சுறுசுறுப்பாகச் செயற்படத் தொடங்கின. கோரம் நடந்த களங்களில் மீட்புப் பணிகள் சீராக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

இந்த நேரத்தில் மனந்தளராது, மனம் நொந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பது எல்லோரின் கடமையாகும்.

# பேரலை அனர்த்தத்தில் தப்பிய சிறுவர்களின் திகில் அனுபவங்கள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற கடற்கொந்தளிப்பின்போது, தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்ட சிறுவர்கள் தாம் எவ்வாறு காப்பாற்றப்பட்டோம் என்பதை, கண்ணீர் மல்க தெரிவித்தனர். அவர்களின் அந்தத் திகில் அனுபவங்களை அவர்களே தெரிவிக்கையில

(சிலாவத்தை)

சிலாவத்தை தீர்த்தக் கரையைச் சேர்ந்த இளவரசன் தரிந்தர் (வயது 13) :-

“அப்பா கடலுக்குத் தொழில் செய்யச்சென்றுவிட்டார். அவருக்கு அண்ணா தேனீர் கொண்டு சென்றார். அம்மாவும் பக்கத்து வீட்டுக்கு ஏதோ அலுவலாகச் சென்று விட்டார். நானும், மற்றைய தம்பிமாரும் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது கடற்கரைக்குச் சென்ற அண்ணா கடல் வருகுது எனக் கத்திக் கொண்டு ஓடிவந்தார்.

அம்மா ஒரு தம்பியையும், நான் ஒரு தம்பியையும் தூக்கிக் கொண்டு வெவ்வேறு திசைகளில் ஓடினோம். ஓடும்போது எம்மைத் துரத்திவந்த தண்ணீருக்குள் நானும், தம்பியும் விழுந்து விடவே, தண்ணீர் இழுக்கத் தொடங்கியது. முடிந்தவரை நான தம்பியை விடாமல் அணைத்துப் பிடித்தேன. அந்தநேரம் மூத்த அண்ணா எமக்குப்பின்னால் வந்தபடியால் நாம காப்பாற்றப்பட்டோம்” என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

இளவரசன் தர்சிகா (வயது 11):-

காலை (ஞாயிறு) 8.30 மணியளவில் வீட்டில் நின்றேன். சனங்கள் சூறாவளி என்று கத்திக் கொண்டு ஓடினார்கள். நானும் எனது தம்பியும் நின்ற உடுப்புகளுடன் ஓடினோம்.

எமது அப்பம்மா நீரில் அடிபட்டுக்கொண்டு வருவதைக் கண்டேன். கையில் தண்ணீர்ப் பெரல் வைததிருந்தபடியால், மிதந்து கொணடிருந்தார். ஆனாலும அவர் வலையில் சிக்கி எனது கண் முன்னாலேயே உயிரிழந்தார். அதை என்னால் மறக்க முடியாது” என்றார்.

இளவரசன் சசிகரன் (வயது13) நான் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் பட்டம் கட்டுவதற்காகத் தடி சீவிக்கொண்டு நின்றேன். வீட்டில் இருந்து தூரத்தில் நின்ற படியால் நான் காப்பாற்றப்பட்டேன் என்றார்.

இளவரசன் தனுசியா (வயது9) -

பனையளவு உயரத்துக்குக் கடல் கறுப்பு நிறத்துடன் வந்தது. கிபிர் விமானம் வருவதுபோலச் சத்தம கேட்டது. வெடி மணம்போல இருந்தது. எனது அப்பம்மா உட்படச் சொந்தக்காரர்கள் 12 பேர் இறந்தனர். சிறிது அவதானததுடன் இருந்தபடியால் தப்ப முடிந்தது என்றார்.

தற்போது இந்த நான்கு சிறுவர்களும் கிளிநொச்சி செல்வா நகரில் தமது உறவினர் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். தாம் காப்பாற்றப்பட்டது தமது பலம் என்று சொல்வதைவிட “கடவுளின் அருளே” என்றார்கள்.

## தகவல்துளிகள்

### இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

- 1772 - இன்றுதான் பயணிகள் காசோலை முதன்முதல் லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1785 - உலகப்புகழ்பெற்ற பத்திரிகைகளில் ஒன்றான லண்டன் ரைம்ஸ் பத்திரிகை யூனிவேர்சல் டெயிலி ரிஜிஸ்டர் என்ற பெயரில் இன்றுதான் முதன் முதல் வெளிவந்தது.
- 1862 - இன்றுமுதல் எப்போதுமே அடிமைகளுக்கு விடுதலை என்ற அடிமை ஒழிப்புப் பிரகடனம் செய்யப் பட்ட நாள் இன்றாகும்.
- 1868 - லண்டன் தலைமைத்தபால் நிலையத்தில் பதிவு அஞ்சல் முறை அறிமுகம் செய்யப்பட்டது இன் றாகும்.
- 1883 - இலங்கைத்தீவில் இணைந் திருந்த வடகிழக்கு தமிழர் மாகாணம் வடக்கு - கிழக்கு என பிரிக்கப்பட்ட நாள்.
- 1904 - மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்து அதன் இலக்கத்தை அவ்வாகனங்களிலேயே பொருத்தவேண்டும் என்ற வாகனச் சட்டவிதி லண்டனில் இன்றுமுதல் கொண்டுவரப்பட்டது.
- 1958 - இலங்கையில் வாகனங்களில் சிங்கள சிறி பொறிக்கப் பட்ட நாள்.
- 1960 - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள கெமருன் நாடு விடுதலை அடைந்தது. இதன்பரப்பு 475450 சதுர கிலோ மீற்றர் ஆகும்.
- 1962 - மேற்கு சாமோவா நாடு விடுதலை அடைந்தது. பசுபிக்கிலுள்ள இந்த நாட்டின் பரப்பு 2900 சதுர கிலோ மீற்றர் ஆகும்.

செக்கோஸ்லோவாகியா, சீனா குடியரசுதினம்.

கியூபா கெயிற்சி சூடான் சுதந்திர தினம்

## நிகோபார்தீவில் நேற்று மீண்டும் நிலநடுக்கம்!

(புதுடெல்கி)

கிரேட் நிகோபார் தீவில் நேற்று அதிகாலை இரண்டு முறை - இந்திய நேரப்படி அதிகாலை 3.05 மணிக்கும் 4.35 மணிக்கும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 5.5 ரிச்டர் மற்றும் 5.2 ரிச்டர் அளவு பதிவானது. இதேபோல் சுமத்திரா தீவின் வடக்குப் பகுதியில் நள்ளிரவு 12.48 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 5.2 ரிச்டர் அளவு பதிவானது.




### சுனாமி அலை தாக்குதல் குறித்து

# இந்திய மத்திய அமைச்சருக்கு ஏற்கனவே தகவல் கிடைத்தும் அவர் அறிவிக்கவில்லை

(புதுடெல்கி)

சுனாமி அலை தாக்குதல் குறித்து இந்திய மத்திய அரசுக்கு தகவல் கிடைத்தும் அவர்கள் எச்சரிக்காமல் மெத்தனமாக விட்டுவிட்டதால் பேரழிவு ஏற்பட்டதாக தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சுனாமி அலை உருவான தகவல் இந்திய மத்திய அமைச்சர் கபில் சிபலுக்கு முன்கூட்டியே தெரியும் என்ற தகவல் இப்போது வெளியாகியுள்ளது. காலை 6.28 மணிக்கு இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டதும் அது உலகநாடுகளிலுள்ள அனைத்து மையங்களிலுமுள்ள பு,கம்பத்தைக் கண்டுபிடிக்கும் கருவிகளில் பதிவாகியிருக்கிறது.

அடுத்து சுனாமி அலைகள் உருவாகி இந்திய கடற்கரையை நோக்கி வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுனாமியின் ஆபத்தை உணர்ந்த இந்தோனேஷியா உடனடியாக இந்தியாவுடன் தொடர்புகொண்டு எச்சரிக்க முயன்றுள்ளது. ஆனால், இந்தோனேஷியாவின் தகவல் தொடர்பு அடுத்த வினாடியே நாசமாகிவிட்டது.

அதன்பின்னர்தான் இந்திய மத்திய அமைச்சர் கபில்சிபலுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் செல்போனில் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ தினம் காலை 6.30 மணிக்கு அவரது செல்போனில் இந்தத் தகவல் பதிவாகியுள்ளது.

கடல்வள ஆராய்சித்துறை அமைச்சர் என்பதால் கபில்சிபலுக்கு இந்தத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியிடம் தெரிவிக்க முயன்றிருக்கிறார். சோனியா 25 ஆம் திகதி இரவு கிறிஸ்மஸ் பிரார்த்தனை நடத்திவிட்டு அதிகாலை 4 மணிக்குத்தான் நித்திரைக்குச் சென்றுவிட்டார் என கேள்விப்பட்டு அவரைக் குழப்பவேண்டாம் என விட்டுவிட்டார்.

அடுத்து அவர் பிரதமர் மன்மோகன்சிங் அல்லது உள்துறை அமைச்சுக்கு அறிவித்திருக்கலாம். இதில் எதையும் அவர் செய்யாமல் விட்டுவிட்டார்.

அதன்பின்னர்தான் சுனாமி அலை ஒரு மணிநேரத்தில் அந்தமானைத் தாக்கியது. கடற்படையினர் இது பற்றி டெல்கிக்கு எச்சரித்துள்ளனர். யாருமே அதை பெரிதாக எடுத்துச் செயற்படவில்லை.

கடறபடை எவ்வளவோ எச்சரிக்க முயன்றுள்ளது. மத்திய அரசு விழித்துக்கொள்ளவில்லை. கபில்சிபலுடன் தொடர்புகொள்ள முடியாததால் கடற்தொழில் அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் முரளி மனோகர் ஜோஷிக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்குள் எல்லாம் முடிந்து பேரழிவு ஏற்பட்டுவிட்டது.

மக்களைக் காப்பாற்ற கிடைத்த வாய்ப்பை கோட்டை விட்டுவிட்டதாக கடும் குற்றச்சாட்டு இந்திய மத்திய அரசு மீது எழுந்துள்ளது.



மத்திய அமைச்சர் கபில் சிபல்



# தி.மு.கவின் ஆலடி அருணா நேற்று வெட்டி படுகொலை!

தி.மு.கவின் முன்னாள் நீதித்துறை அமைச்சராக இருந்த ஆலடி அருணா மற்றும் அவருடன் சென்ற ஆசிரியரொருவர் நேற்றுக்காலை 7 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.

சில தினங்களுக்கு முன்னர் ஆலங்குளத்திலுள்ள தனது வீட்டுக்குச் சென்றிருந்த இவர், இருவருடன் சேர்ந்து நேற்றுக்காலை வீட்டிலிருந்து புறப்பட்டு நடை பயிற்சியில் ஈடுபட்டார்.

இவர்கள் மூவரும் நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவர்களை வழிமறித்த பின்னர் ஆலடி அருணாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்தநிலையில் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் அவர்களுடன் பின்னர் கதைக்கலாம் என ஆலடி அருணா தெரிவித்தார்.

இவ்வேளை இனந்தெரியாதவர்களில் ஒருவர் ஆலடி அருணாவை நோக்கி கைத்துப்பாக்கியால் சுடவே அவரது கழுத்தில் பட்டது. அவர் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்த நிலையில் அவ்விடத்திலிருந்து தப்பியோடினார். ஆனாலும் அவரை விரட்டிய அந்தக் குழுவினர் அவரது கழுத்தின் பின்புறத்திலும் உடலின் பல்வேறு பகுதிகளிலும் வெட்டினர். அத்துடன் ஆலடி அருணாவுடன் கூடச் சென்ற ஆசிரியரும் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானார்.

பலத்த வெட்டுக்காயங்களுக்கிலக்கான இருவரும் அவ்விடத்திலலேயே உயிரிழந்தனர். இவர்களுடன் கூடச் சென்ற சோக்ரட்டீஸ் மட்டும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

ஆலடி அருணா உயிரிழந்ததை உறுதி செய்த அந்தக் குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்தக் கொலையில் ஈடுபட்டவர்கள் யாரென்பது இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் கொலையாளிகள் பயன்படுத்திய கைத்தொலைபேசி ஒன்றை



சம்பவ இடத்தில் விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த கைத்தொலைபேசியை கண்டெடுத்த பொலிஸார் இதன்மூலம் கொர்லையாளிகளை கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

### ஆர்ஜன்ரீன இரவு விடுதியில்

# தீ விபத்து: 149 பேர் பலி!



ஆர்ஜன்ரீனா நாட்டின் தலைநகர் பியூனஸ் அயர்ஸில்லில் அமைந்துள்ள பிரபலமான ரிபப்ளிக்கா டிலா குரோக்மேனன் எனும் இரவு விடுதியில் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 149 பேர் பலியாகினர்.

இளைஞர்களை அதிகம் கவர்ந்த இந்த இரவு விடுதியில் தினமும் நள்ளிரவு வரை நடனம் நடைபெறும். இதில் இளைஞர்கள் ஆடிமகிழ்வார்கள்.

நேற்று நள்ளிரவில் இந்த விடுதியில் திடீரென தீப்பிடித்தது. தீ மளமளவென்று நடனமாடிக்கொண்டிருந்த அரங்கிற்கும் பரவியது.

அப்போது அங்கு 1500 இற்கு மேற்பட்டவர்கள் நடனமாடிக் கொண்டிருந்தனர். அரங்கில் தீப்பிடித்ததும் அவர்கள் தப்பியோடி முயன்றனர். சிறிய வாசல் வழியாக அனைவரும் வெளியேற முடியாததால் தீயில் சிக்கி 149 பேர் பலியாகினர். மேலும் 260 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் பலர் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இரவு விடுதியின் மேற்கூரையிலேயே தீப்பிடித்ததாக கூறப்படுகிறது.

# விடைத்தாள் மதிப்பிடும் பணி திங்கள் முதல் யாழில் ஆரம்பம்!

க.பொ.த சாதாரணதர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளிலும் இந்தப் பணி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

குடாநாட்டின் 57 பிரதம பரீட்சகர்களின் தலைமையில் 850 ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பிடும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இந்த மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுவோர் அன்றைய தினம் காலை 8 மணிக்கு சம்மந்தப்பட்ட பாடசாலைகளுக்கு சமுகமளிக்குமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ச.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை விடைத்தாள்கள் திருத்தும் பணி இன்று நடைபெற இருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் திங்கள் முதல் ஆரம்பமாகவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிறுவர்களின் நலன்களைக் கவனிக்க யாழ்.இந்துவில் செயலணி அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக யாழ். இந்துக் கல்லூரியில் செயலணி ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களின் உடல், உளரீதியான பாதிப்புக்களை ஈடுசெய்யும் வகையில் புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், நிதி சேகரித்தல் போன்ற பணிகளை இந்தச் செயலணி மேற்கொள்ளவுள்ளது.

ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அடங்கிய இந்துக் கல்லூரி சமூகத்தினர் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயலணியுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் ந.ஜெயக்குமார் 0777551486 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது 0212222431 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது ihctsunami2004@gahoo.com. என்ற மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்புகொள்ள முடியும்.

உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்க ஆளணியைத் திரட்டும் வகையில் இன்று காலை 9 மணிக்கு செயலமர்வு ஒன்றும் நடைபெறவுள்ளது இதில் உதவும் மனம் படைத்த மாணவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலணி அழைப்பு விடுத்துள்ளது.






கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 'நமது ஈழநாடு' நிறுவனத்தால் யாழ். குடாநாட்டு மக்களிடம் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருட்கள், நேற்று கிளிநொச்சியில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளிக்கப்பட்டதை காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பட்டதாரி பயிலுனர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

அரச சேவையில் உள்ளடக்கப் படுவதற்கான பயிற்சிநெறியில் இணைந்துகொண்ட பட்டதாரிகள், பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்து கொண்டமைக்கான கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

பட்டதாரிப் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பாக யாழ். அரச அதிபரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பட்டதாரிகளுக் கான நிரந்தர நியமனக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக ளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளன. ஏற்கனவே நியமனக் கடிதங் கள் கிடைத்தவர்கள் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய திணைக்களங்களுடன் தொடர்புகொள்ளமுடியும்.

## சுனாமியில்..

கொண்டு வரப்பட்ட இவர்கள் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தனர். இவர்களின் உடல் வைத்தியப் பரிசோதனை களின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

## உயிரிழந்த மக்களுக்காக...

அத்துடன் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் வகையில் அரச மற் றும் பொது நிறுவனங்களிலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வீதியில் பயணஞ்செய்த வாக னங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததுடன், பொது மக்களும் துக்கத்தை வெளிப்படுத் தும் வகையில் கறுப்புப்பட்டி அணிந்து காணப்பட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணியள வில் உயிரிழந்த மக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆங்காங்கே ஒன்றுகூடிய மக்கள் கைகளில் மெழுகுதிரியை ஏந்திய வாறு பிரார்த்தனையில் ஈடுபட்டதை யும் காணமுடிந்தது.

சுமார் 10 நிமிடங்கள் நீடித்த இந்த அஞ்சலி நிகழ்வின்போது, வீதிகளில் சென்ற அனைத்து வாக னங்களும் அந்தந்த இடங்களில் நிறுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கது.

துக்கதினமான நேற்று கூட்டுற வுச் சங்கங்கள், தனியார் நிறுவனங் களின வாசல்களிலும், பொது இடங் களிலும் கறுப்புக்கொடி பறந்து கொண்டிருந்தது. இதேவேளை, நேற்றைய தினததை அரசாங்கம் தேசிய துக்கதினமாகப் பிரகடனம் செய்திருந்தது. இதனால் நாடு முழு வதிலும் உள்ள அரச மற்றும் பொதுக் கட்டடங்களில் சிங்கக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன.

துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆங்காங்கே கறுப்பு, வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப் பட்டதுடன், சமயப் பிரார்த்தனை களும் இடம்பெற்றன. யாழ். செய லகம், பொலிஸ் நிலையம் போன்ற வற்றிலும் சிங்கக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமி கடற்...

கடற்புலிகள் என்று பார்க்கும்போது முல்லைததீவில் மேஜர் தர்மேந்திரா உட்பட மூன்று போராளிகளும், பெற றோல் ஐயா எனப்படும் துணைப் படை வீரர் ஒருவரும், வடமராட்சி யில் மூன்று கடற்புலிகளும் இறந் துள்ளனர். இவையே கடற்புலிக ளுக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

அதுதவிர இந்தப் பேரலை அனர்த்தத்தில் எமது கடற்கண் காணிப்பு நிலையங்களுக்கு சேதங் கள் ஏற்பட்டன. திருமலையில் இரண்டு ராடர் நிலைகள், மட்டக் களப்பில் இரண்டு ராடர் நிலைகள் என நான்கு காண்காணிப்பு நிலை களே பாதிக்கப்பட்டன. சில வெடி பொருட்களும் நீரால் சேதமடைந் தன. அதுதவிர 27 அடி நீளமுள்ள பயிற்சிப் படகுகள் சில கடல்நீரி னால் அடித்துச்செல்லப்பட்டன.

சாலை மற்றும் வட்டுவாகல் கடற்புலித் தளங்களுக்கு எந்தவித பாதிப்புக்களுமில்லை. ஏற்கனவே புயல் அபாயம் காரணமாக எமது விசைப்படகுகள் அனைத்தையும் உட்பகுதிகளுக்கு கொண்டுசென்றி ருந்தோம். எனவே அவைகளுக்கு பாதிப்பு ஏதுமில்லை.

மக்கள் கூட தங்கள் இழப்புக்க ளைப் பற்றியெல்லாம் கவலைப்படா மல் எம்மிடம் வந்து உங்களுக்கு இழப்பேதும் இல்லையா என்று வாஞ்சையோடு கேட்டார்கள்.

நாங்கள் அவர்களுக்கு எங்க ளுக்கு எந்த இழப்பும் இல்லை என்ற விபரத்தைத் தெரிவித்தோம் என கேணல் சூசை தெரிவித்திருந் தார்.

## கிழக்கில் கடும்...

மற்றும் மட்டக்களப்பு மாவட்டங் களில் பெய்யத் தொடங்கிய மழை நேற்று தீவிரமாக இருந்தது. இந்த மழையால் பேரழிவு ஏற்படுமோ என்ற அச்சத்தில் அப்பகுதி மக்கள் உள்ளனர்.

இதேவேளை, நேற்று கோப்பாய், உரும்பிராய் பகுதிகளில் பொலி ஸாரால் ஒலிபெருக்கி மூலம் சூறா வளி அச்சுறுத்தல் இருப்பதாக விடுக கப்பட்ட எச்சரிக்கையால் அப்பகுதி மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

நேற்றிரவு 10 மணிக்கும் இன்று காலை 10 மணிக்கும் இடையில் சூறாவளி ஆபத்து இருப்பதாக பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டது. ஆனால், நேற்றிரவு கோப்பாய் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது - தாம் அப்படியான எந்த எச்சரிக்கை அறி விப்பையும் விடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (10,12)

## பணிநிலை வேண்டுகை

1.பக்க வடிவமைப்பாளர்கள்
*Page Maker, Photoshop, Coral draw* தெரிந்தவர்கள் தேவை.

2.கணினி தட்டெழுத்தாளர்கள்
திறமையாக Type செய்துகொள்ளக் கூடியவர்கள் தேவை
D.T.P. யில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.சிற்றூழியர்கள் - இயந்திர உதவியாளர்கள்
அலுவலகத்தில் சிற்றூழியராக பணியாற்ற நல்லொழுக்கமுடைய வர்கள் தேவைப்படுகின்றனர். அச்சு இயந்திரத்தில் உதவியாளர்களாகப் பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் தேவை.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 03.01.2005 காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
(இ) 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## அவசரமாக...

இறங்கியுள்ளது. இதன் காரணமா கவே எதிர்வரும் 15 ஆம் திகதி மீள்கட்டுமானப் பணிகளை ஆரம் பிக்கவுள்ளதாக ஜனாதிபதி சந் திரிகா அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள், உதவி வழங்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

இதன் பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந் தத் தொகையை சர்வதேச சமூகத் திடமிருந்து பெற்றதும் மீள் புனர மைப்பு விரைவில் ஆரம்பிக்கப்படும்.

சகல அரசியற் கட்சிகளும் குறிப பாக எதிர்க்கட்சித் தலைவரும்கூட எமது மீள் புனரமைப்புத் திட் டத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். இது தொடர்பாக நாம் ஏற்கனவே விடு தலைப்புலிகளுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளோம். அவர்களது பதிலும் விரைவில் எதிர்பார்க்கப்படு கிறது. இந்த மீள் புனரமைப்புப் பணி கள் ஆறு மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும். நேற்றுமுன்தினம் வந்த தகவலின்படி உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை 25 ஆயிரமாக அதிகரித்ததுடன் காணாமற்போன வர்களின் எண்ணிக்கை 4 ஆயி ரத்து 600 ஆக உள்ளது. இந்தக் காணாமற்போனவர்கள் உயிரிழந்து போயிருக்கலாம்.

நோய்த்தொற்றுக் காரணமாக உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை. நோய்த் தொற்றுப் பரவாமல் தடுக்க பாதிக் கப்படட பிரதேசங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் உடைந்த கட்டடப் பகுதிகளிலி ருந்து புதிய சடலங்கள் தற்போது மீட்கப்பட்டு வருவதனால் உயிரிழப் புக்கள் அதிகரித்து வருகிறது.

இந்தக் கடற்கொந்தளிப்பால் 75 ஆயிரம் வீடுகள் முற்றாகவே சேத மாகியுள்ளன. 21 ஆயிரம் வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

அரிதான சந்தர்ப்பம்!
பக்கம் ... 02 பார்க்கவும்

## சுனாமியில் சிக்கி 13 பொலிஸார் பலி

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுனாமி கடற்கொந்தளிப்பால் 13 பொலிஸார் கொல்லப்பட்டதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர் னாண்டோ தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தால் மேலும் 8 பொலிஸார் காயமடைந்ததுடன், 21 பொலிஸார் காணாமற் போயி ருப்பதாகவும் தெரிவித்த அவர் -

இந்தக் கடற்கொந்தளிப்பால் மேலும் வடக்கு - கிழக்கிலுள்ள பல பொலிஸ் நிலையங்கள் பலத்த சேதமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:-
MR.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
03.01.2005 திங்கள்
மாலை 4 மணி
MON WED 4 P.M- 5 P.M
HARY'S INSTITUTE
இல, 564 கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சீ-3532)

## காயமடைந்த மக்களுக்கும் புனர்வாழ்வுக்கழகம் உதவி

கடற் கொந்தளிப்பினால் பாதிப் புற்று படுகாயங்களுக்குள்ளாகி யாழ்.போதன வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மக்களுக்கு பெற்சீற், சாரம் அவசரமாகத் தேவைப் படுவதாக வைத்தியசாலை நிர்வா கம் அறிவித்ததையடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அம்மக்க ளுக்கு உடனடியாகவே அப் பொருட்களை வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 27 நலன்புரி நிலையங்களின் தேவைகளை அறிந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக மும் பிற நிறுவனங்களும் மக்கள் தொண்டர் அமைப்புக்களும் உதவி வருகின்றன.

கடற்கொந்தளிப்பு அபாய எச்ச ரிப்புவிடுக்கப்பட்டதன் காரணமாக பெருமளவிலான மக்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர். மீள அம் மக்கள் தமது இருப்பிடங்களுக்கு செல்வதற்குரிய சூழல் ஏற்படாத தனால் அம்மக்களையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

இதனால் நிறைய உதவிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு தேவைப்படுகின்றது என யாழ். மாவட்ட பணிப்பாளர் ஜெயராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பழுதடைந்த அரிசியை...

முன்பாக வீசியெறிந்தனர்.

நேற்று நண்பகல் 12 மணியள வில் பாவனைக்குதவாத அரிசியு டன் பிரதேச செயலகத்தை முற்று கையிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள், அங்குள்ள உத்தியோகத் தர்களிடம் ஏன் தரமற்ற அரிசியை வழங்கினீர்கள் என்று ஆத்திரம் பொங்க கேள்வியெழுப்பினர்.

அத்துடன் பலத்த கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதைய டுத்து பருத்தித்துறை பிரதேச செய லர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்க ளுடன் பேச்சு நடத்தி சமரசம் செய் தார்.

தரமற்ற அரிசியை வழங்கியது தவறென்றும், இனிமேல் அவ்வாறு நடைபெறாது என்றும் உறுதியளித்த அவர், பாவனைக்குதவாத அரிசியை மீளப்பெற்று தரமான அரிசி நலன் புரி நிலையங்களுக்கு விநியோகிக் கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர் கள் கலைந்துசென்றனர். இந்த ஆர்ப் பாட்டத்தால் பிரதேச செயலகப் பணிகள் நேற்று ஒரு சில மணி நேரம் பாதிக்கப்பட்டன.

பிரதேச செயலகத்துக்கு முன் பாகவும், வளாகத்திலும் கொண்டு வந்து கொட்டப்பட்ட பாவனைக்குத வாத அரிசியை நகரசபைத் தொழி லாளர்கள் அகற்றினர் என்பது குறிப பிடத்தக்கது.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக் களுக்காக வழங்கப்படும் பொருட் களில் மோசடிகள் இடம்பெறுவது தொடர்பாக தகவலறிந்த பருத்தித் துறை மாவட்ட நீதிவான் க.அரிய நாயகம், இதனைத் தடுக்க நடவ டிக்கை எடுக்குமாறு பொலிஸா ருக்கு உத்தரவிட்டார்.

(12,14)

## மேலும் 3 போர்க்...

சுகன்ஜா ஆகியன திருகோணம லைத் துறைமுகத்திலும், ஐ.என். எஸ் சாரதா, ஐ.என்.எஸ் அற்லெஜ் ஆகியன காலியிலும் தரித்து நிற்கின்றன.

இவை உள்ளூர் அதிகாரிக ளுடன் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. இந்த நிலையில் ஐந் தாவது போர்க்கப்பலான ஐ.என். எஸ்.ஆதித்யா நேற்றுமாலை கொழும்புத் துறைமுகத்துக்கு வந் தது. இதில் உதவிப் பொருட்க ளுடன் மருத்துவக் குழுக்கள் வந் துள்ளன.

அத்துடன் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ரஷ்யத் தயாரிப்பு ஐ.எல்.76 ரக போக்கு வரத்து விமானங்கள் இரண்டு தலா 70 பேர் கொண்ட மருத்துவக் குழுக்களுடன் நேற்று கொழும்பை வந்தடைந்தன.

ஏற்கனவே இந்திய விமானப் படையின் ஆறு எம்.ஐ.17 ரக ஹெலி கள் உதவி, மீட்புப் பணிகளுக்கு உதவிவருகின்றன. இதேவேளை இந்தியக் கடற்படையின் மேலும் இரு கப்பல்கள் உதவிப் பொருட் களுடன் நேற்று கொச்சின் துறை முகத்திலிருந்து புறப்பட்டன.

ஐ.என்.எஸ்.ஜமுனா மற்றும் ஐ.என்.எஸ். சர்வேக்ஷக் ஆகிய னவே தண்ணீர், கம்பளிகள் உள் ளிட்ட 15 தொன் உதவிப் பொருட் களுடன் கொழும்பு நோக்கிப் புறப் பட்டன.

ஜமுனா என்ற போர்க்கப்பலில் 116 படுக்கைகளைக் கொண்ட வைத்தியசாலையும் 60 நோயாளர் களுக்கு சிகிச்சையளிக்கும் வசதி களும உள்ளன. 5000 கிலோ மருத துவப் பொருட்களுடன் நவீன சத் திர சிகிச்சைக்கூடம், ஆய்வுகூட வசதிகளையும் இது கொண் டுள்ளது.

இந்திய இராணுவ, கடற்படை யைச் சேர்ந்த 80 மருத்துவ அதி காரிகள் இந்தக் கப்பலில் பணி யாற்றுவதாக இதன் கட்டளை அதி காரி கப்டன் முரளிதரன் நாயர் தெரிவித்தார். கொச்சினிலிருந்து புறப்பட்ட இரு கப்பல்களும் பூசா வுக்கு செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பண்டிகைக்கால விசேட சலுகை
வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கு
5/= மட்டுமே
மேலும் தொடர்ச்சியான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கான எமது அங்கத்துவ அட்டையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
இந்தியா 20.00
திருமுருகன் கொம்நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

## மரண அறிவித்தல்

### அகஸ்ரீன்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

(வேலைமேற்பார்வையாளர். - நகரசபை, வவுனியா)

இறம்பைக்குளம் வவுனியாவைச் சேர்ந்த அகஸ்ரீன்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை நேற்று காலமாகிவிட்டார்.

இவர் அகத்தம்மாவின் அன்புக் கணவரும், மில்றெட் அந்தோனியா ஆரோக்கியநாதர், யோசேப்பின் செபஸ்ரியாம்பிள்ளை, யேசுரெட்ணம், ஜீவரெட்ணம், மரியரெட்ணம், தர்மரெட்ணம், மேபிள் மற்றில்டா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*32/05, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.*

(இ) தகவல், மி.அ.ஆரோக்கியநாதர் (மகள்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புதிய ஆண்டை வேதனையுடன் ஆரம்பித்தாலும் அதனை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம்!

## யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

(யாழ்ப்பாணம்)

மலரப்போகும் புதிய ஆண்டைச் சோகத்திலும், வருத்தத்திலும், ஏக்கத்திலும், வேதனையிலும் ஆரம்பித்தாலும் நம்பிக்கையோடு இருப்போம் என யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் - புத்தாண்டு மலருகின்ற வேளையில் தமிழ் மக்கள் மனதுகளிலே சோகமும், வேதனையும், வருத்தமுமே நிறைந்திருக்கிறது. பல வருடங்களாகப் போரின் மத்தியில் வாழ்ந்து அனுபவித்த அழிவுகள், வேதனைகள், உயிரிழப்புக்கள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதிலே முழுமையாகத் திரும்பவும் அனுபவித்த ஒரு வேதனைமிக்க உணர்வையே தமிழ்மக்கள் பெற்றிருக்கிறார்கள்.

இந்த வகையில் இவ்வருடம் மிகவும் வித்தியாசமான ஒரு வருடமாகவே பிறந்திருக்கிறது.

உயிரிழப்புக்களையும், பொருள் இழப்புக்களையும் பெருமளவில் அனுபவித்து, அனைத்தையும் இழந்து இடம்பெயர்ந்து போயுள்ள மக்கள் அந்த அதிர்ச்சியிலும், வேதனையிலும் இருந்து விடுதலை பெற முடியாதவர்களாக நம்பிக்கையிழந்து வாழ்க்கையின் விளிம்பிலே போய் நிற்கிறார்கள். உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் தாக்கப்பட்டுள்ள இவர்களுக்கு உதவி புரிவதும், நம்பிக்கையூட்டுவதும் மீளவும் வாழ முடியும் என மனப்பலம் தருவதும் இவ்வேளையில் மிக அவசியமாக இருக்கிறது.

எனது அழைப்பை ஏற்று கொண்டாட்டங்களை முழுமையாக நிறுத்திய அன்பு மக்களுக்கும், உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள் அனைத்துக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

இளையவர்களின் பணியை இங்கு நாம் குறிப்பாகப் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். அர்ப்பணிப்புடன் இவர்கள் பணியாற்றுகிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியோரின் பணிகள் பெரிதும் போற்றப்படவேண்டியவை.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தலும், உடலியல் ரீதியான உதவிகளும் இன்னும் பல காலத்துக்குத் தேவையாக இருக்கும்.

எனவே இது போன்ற பணிபுரியக்கூடிய அரச பணியாளர்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும், இளைஞர் அமைப்புக்களையும், மற்றவர்களையும் மனிதாபிமானத்தோடு மனிதநேயப் பணிபுரிய முன்வரவேண்டும் என அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

புதிய ஆண்டை சோகத்திலும், ஏக்கத்திலும், வேதனையிலும் ஆரம்பித்தாலும் நம்பிக்கையோடு இருப்போம். கடவுள் எல்லாம் வல்லவர், வல்லமை மிக்கவர்.

இந்த அழிவுகள் மத்தியில் நம்பிக்கையையும், மன உறுதியையும் வாழக்கூடிய சக்தியையும் தர வல்லவர். தமிழ்மக்கள் அனைவரையும் எல்லாவிதமான துன்பதுயர அனுபவங்கள் அனைத்திலும் இருந்து பாதுகாத்து வழிநடத்த அனைவரும் விசேட செபத்தில் ஈடுபடும்படி அன்புடன் அழைக்கிறோம். கடவுள் நம்மை நிச்சயம் பாதுகாத்து வழி நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செயலணிக்குழு மூலமே உதவிப் பொருட்கள்!

## அரசசார்பற்ற நிறுவனங்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை வழங்குவதற்கு யாழ்.மாவட்ட கூட்டு செயலணிக்குழு ஒன்று பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

எனவே சகல நிவாரணப் பணிகளும் இந்த கூட்டு செயலணிக்குழு மூலமே சென்றடைய வேண்டுமெனவும், இவ்வாறு செய்வதன்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் உரிய முறையில் சென்றடையுமென யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் என்பன தெரிவித்துள்ளன.

# நெடுந்தீவு பயணிகள் படகுகளுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை!

கடல் அனர்த்தத்தின் போது நெடுந்தீவுக் கரையோரப்பகுதியில் கடல் மட்டம் அதிகரித்து, நீர் உட்புகுந்தபோதும் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகள் எதுவும் தெய்வாதீனமாக சேதமாக்கப்படவில்லை.

குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையிலான சேவையில் ஈடுபடும், குமுதினி, சமுத்திராதேவி, உதய தாரகை, அக்குவாட்டிக் ஆகிய படகுகளும் - அண்மையில் யாழ். அரசஅதிபரால் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்துக்கு வழங்கப்பட்ட இரு இந்திய இழுவைப் படகுகள் என்பன சம்பவ தினத்தன்று நெடுந்தீவு துறைமுகப் பகுதிலேயே தரித்து நின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடல்மட்ட உயர்வால் சகல படகுகளின் பாதுகாப்புக்காக கட்டி வைக்கப்பட்ட கயிறுகள் அறுந்துள்ளபோதும், படகுகள் எதுவும் சேதமடையாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# சுனாமி கடல் அலையினால் நெடுந்தீவுக் கரையோரப்பகுதி எல்லை கல்வேலிகளும் சேதம்

(நெடுந்தீவு)

கடற் கொந்தளிப்பால் அச்சம் கொண்டிருந்த நெடுந்தீவு பிரதேச மக்கள் தற்போது தங்கள் அன்றாட வேலைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட கடல் அலையின் சீற்றத்தால் நெடுந்தீவின் கரையோரம் பாதிக்கப்பட்டபோதும், எந்தவிதமான உயிரிழப்புக்களோ, காயங்களோ, சொத்தழிவுகளோ இன்றி தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நெடுந்தீவு - தாளைத்துறைப் பகுதியில் கரையோரப் பாதைகள் ஏற்கனவே பருவக் காற்றுக்களால் சேதப்படுத்தப்பட்டபோதும், கடலுக்கு சமீபமாக தொழில் காரணமாக வசித்து வந்தவர்களது எல்லைக் கல்வேலிகள் பெரும் சேதமடைந்துள்ளதுடன், கடலுக்கு சமீபமாகவிருந்த இரு குடிசைகள் பாதிப்படைந்தன.

இதேவேளை, மாவிலித்துறை முகம் முதல் காளைமுனை வரையான கடற்கரையோரக் குடியிருப்பாளர்களது எல்லை வேலிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், வேலிக்கற்களும் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

நெடுந்தீவுக்கான பயணிகள் படகுசேவை கடந்த 28 ஆம் திகதி முதல் வழமைக்குத் திரும்பியுள்ளதுடன், சில கடற்தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. (113)

### அரியாலையில் உள்ள

# இலந்தைக்குளம் பாலத்தினூடான போக்குவரத்து அபாயம்!

(யாழ்ப்பாணம்)

அரியாலை - இலந்தைக்குளம் பாலம் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் இந்தப் பாதையூடான போக்குவரத்து பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இந்த வீதியால் பாடசாலை மாணவர்களே அதிகமாகப் பயணிப்பதால் பெரும் அச்சத்துடனேயே இவர்கள் தமது பயணத்தைத் தொடரவேண்டியுள்ளது.

மேலும் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இந்தப் பாலத்தின் அடியில் பெருமளவு நீர் தேங்கி நிற்பதால் மேலும் அபாயகரமானதாக இந்தப் பாலம் மாறியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடடினடியாக இந்தப் பாதையை சீர்செய்து, மக்களின் போக்குவரத்து சீராக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பாதிக்கப்பட்ட மக்களுக்காக

# இலவச தொலைபேசி நிலையங்கள் யாழ். நகரப் பகுதியில் அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, அல்லலுறும் மக்களின் நன்மை கருதி அவர்களின் தொடர்புகளை இலகுபடுத்துவதற்காக சன்ரல் தொலைத்தொடர்பு நிறுவனத்தினர் யாழ்ப்பாணத்தில் ஐந்து இடங்களில் தற்காலிக இலவச தொலைத்தொடர்பு நிலையங்களை அமைத்துள்ளனர்.

யாழ். பஸ் தரிப்பு நிலையம், யாழ். வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு, யாழ்.வைத்தியசாலை நோயாளர் விடுதி, யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன் (பரமேஸ்வரா சந்தி), யாழ். கொக்குவில் பொற்பதி ஆலயத்துக்கு அருகில் ஆகிய ஐந்து இடங்களிலும் மேற்படி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொலைத்தொடர்பு நிலையங்கள் ஊடாக தங்களுக்குத் தேவையான இடங்களுக்குத் தொடர்புகளை ஏற்படுத்தி, தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

இன்றைய மக்கள் பாதிப்பு நிலையைக் கருத்திற்கொண்டு செயற்படுத்தப்படும் இந்த நிலையங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தாமல், உண்மையான மக்கள் பாதிப்பு விடயங்களுக்கான தகவல்களைப் பரிமாறுவதற்காகப் பயன்படுத்தி ஒத்துழைக்குமாறு சன்ரல் நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ தென்மராட்சியில் செயலணிக்குழு

கடற்கொந்தளிப்புக் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் தென்மராட்சி பிரதேச மக்களிடமிருந்து சேகரிக்கப்படும் பொருட்களை தேவையான இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்காக நேற்றுமுன்தினம் தென்மராட்சிப் பகுதியில் நிவாரண செயலணிக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தலைமையில், டிறிபேக் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் தென்மராட்சி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினதும் மற்றும் பொது அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இதன்போதே இந்த செயலணிக்குழு அமைக்கப்பட்டது.

இதன்படி மக்களிடம் பொருட்கள் சேகரிக்கும்போது அதற்குப் பற்றுச்சீட்டு வழங்குதல், பற்றுச்சீட்டு கொண்டுசெல்லாத எவரிடமும் மக்கள் எந்தவித உதவிகளையும் வழங்கவேண்டாமென அறிவுறுத்துதல், தற்போதைய சூழ்நிலையில் எந்தவித கேளிக்கை நிகழ்வுகளையும் நடைபெறாமல் தவிர்த்தல், நிவாரணப் பொருட்கள் சேகரிப்பதை பல்வேறு இடங்களுக்கும் பன்முகப்படுத்தல்.

அத்துடன் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருட்களை டிறிபேக் கல்லூரிக்கு அனுப்பிவைத்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, வரணி ஆகிய பிரதேசங்களுக்குத் தனியான செயலணிக் குழுக்களும் அமைக்கப்பட்டன.

தென்மராட்சி செயலணிக்குழுவின் தலைவராக டிறிபேக் கல்லூரியின் அதிபர் அருந்தவபாலனும், செயலாளராக புவனாவும், பொருளாளராக கோகுலனும், உறுப்பினர்களாக மேலும் பத்துப் பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# வாகன உரிமம் பெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி!

2005 ஆம் ஆண்டுக்கான வாகன வரி உரிமம் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பகுதியினர் தெரிவித்தனர்.

மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள சுற்று நிருப இல 01/2005 இதன்படி வாகன வரி உரிமத்தைப் பெறுவதற்கு- வாகனத்தகுதிச் சான்றிதழ், பதிவுச் சான்றிதழ் அல்லது வாகன அடையாள அட்டை, இறுதியாகப் பெற்ற வாகன வரி உரிமம் அல்லது பற்றுச்சீட்டு, காலாவதியாகாத காப்புறுதிப்பத்திரம், உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை, வழி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றின் ஆவணங்களுடன் நேரடியாக உரிமையாளர் வருகைதரல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
முதலாவது அகவையில்



பெயர் : பா.ஆர்த்திகா
முகவரி : அல்வாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# சகல தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தின் வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

தாயகப் பிரதேசம் முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற அனர்த்த நிலையைக் கருத்திற்கொண்டு பாடசாலைகள் இயங்காத இந்தக் காலகட்டத்தில் சகல தனியார் நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து அல்லற்படும் மக்களின் துயர்தீர்க்கப் பாடுபடுமாறு நல்லூர்க் கோட்ட தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் - உரிய ஒருங்கிணைப்பு மையங்களோடு தொடர்பு கொண்டு உதவிகளை வழங்குமாறும், நிதி சேகரிப்பில் மாணவர்களை ஈடுபடுத்துவதால் பொறுப்பான ஆசிரியர்களோடும், உரிய அத்தாட்சி முறைகளோடும் அவர்களை அனுப்புமாறும், சேகரிக்கப்படும் சகலவற்றுக்கும் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களில் சேகரிக்கப்படும் பொருட்கள், பணம் என்பனவற்றை யாழ். மாவட்ட அரசியற்துறையால் உருவாக்கப்பட்டிருக்கும் துயர் துடைப்பு மையத்திடம் கையளிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## வன்னிப் பதிவுகள்

### முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு நுவரெலியாவிலிருந்து பொருட்கள்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்தளை,மன்னார் - நானாட்டான், நுவரெலியா பகுதிகளில் இருந்து லொறி மூலம் உதவிப்பொருட் கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாத்தளை அம்மன் கோயில் தேவஸ்தான உறுப்பினர்களும், அந்துப் பகுதி மக்களும் இணைந்து சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் 2 லொறிகளிலும், மன்னார் - நானாட்டான் மக்களாலும், அந்தப்பகுதி வர்த்தகர்களாலும் இணைந்து சேகரிக்கப்பட்ட பொருட்கள் ஒரு லொறியிலும், நுவரெலியா மக்களாலும், வர்த்தகர்களாலும் இணைந்து சேகரிக்கப்பட்ட பொருட்கள் 4 லொறிகளிலும் முல் லைதீவுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை தியாக சிந்தையுடன் காப்பாற்ற முன்வர வேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

கடல் கடந்து சென்று உழைக்க வேண்டும். திரவியம் தேட வேண்டும் என்று யாருக்காகப் போனார்களோ, அவர்களை எமது புலம் பெயர்ந்த உறவுகள் இழந்து விட்டார்கள். எனவே எஞ்சிய மக்க ளைக் காப்பாற்ற அனைவரும் தியாக சிந்தனையுடன் செயற்பட முன்வர வேண்டும் என, முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் ஏற்பட்ட கடற் பூகம்பத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 34 கிராமங்கள் முற்றாக அழிந்துள்ளன. சுமார் 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இறந்து விட்டனர். 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, நிர்க்கதி யான நிலையில் நலன்புரி நிலை யங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தால் இந்த மக்கள் 19 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு உணவு, உடை இதர வசதிகள் வழங்கிப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மக்கள் எவருமே தம்முடன் எந்தவொரு பொருளையுமே எடுத்துவரவில்லை. எனவே அவர்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படுகின்ற சகல உதவிகளையும் நாங்கள் வழங்க வேண்டிய பாரிய பொறுப்பிலே இருக்கி றோம்.

எனவே மக்களை நலன்புரி நிலையங்களிலேயே வைத்து நீண்ட நாட்களுக்குப் பராமரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. இந்த நலன்புரி நிலையங்களைப் பராமரிப்பதற்கு நிறையத் தேவை கள் உள்ளன.

இந்த நலன்புரி நிலையங்களில் குடிதண்ணீர் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இங்கு சுமார் 300 தண்ணீர்க் கொள்கலன்கள் தேவை. தண்ணீர் பவுசர் ஒன்றுகூட எம்மிடம் இலலை. மக்களுக்கு போதியளவு உடுபுடவைகள் இல்லை. குழந்தைகளுக்கு பால்மா, ஓடிக்கொலோன், கிறேபவாட்ர் எனப்பலவும் தேவைப்படுகின்றன.

நலன்புரி நிலையங்கள் நிரம்பி விட்டன. அங்கு சுகாதாரப் பிரச்சினை, மருத்துவப் பொருட்களுக்கு பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு என நிறையச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவு, உடை இதர வசதிகளை வழங்கி வருகிறது. பிற நிறுவனங்களும் சிறுசிறு உதவிகளைச் செய்து வருகின்ற போதிலும், முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய அவை போதாமலே உள்ளன.

முக்கியமாக-மக்கள் தொழில் செய்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள், பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், மோட்டார் கள் எல்லாமே கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு அழிந்து போயுள்ளன.

விவசாய நிலங்கள் யாவும் உவராக்கப்பட்டு விட்டன. முல்லைத்தீவு நகரமே சுடுகாடாகியுள்ளது. இந்த நிலையில், இந்த மக்களை மீள் குடியமர்த்துவது என்பது - பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட தன் பின்னரே சாத்தியமாகும்.

எனவே இந்த மக்களின் துயர் துடைக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. கடந்த காலங்களில் போரால் குடும்பத் தலைவர்களை இழந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இந்த மாவட்டத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

முன்னரும் பாரிய அழிவைச் சந்தித்த இந்த மாவட்டம் - இன்று மீளவும் பாரிய அழிவுக்கு உட்பட்டுள்ளது என்றால், நாம் இந்த நேரம் எதையும் சிந்திக்க வேண்டியதில்லை. அவலப்பட்டுக் கொண்டிருக்கின்ற எங்களுடைய இரத்த உறவுகள் இன்று தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

உறவுகளை இழந்தும், பிரிந்தும், பிணங்களுக்கு நடுவில் நின்று குடும்பங்களில் உயிர் தப்பிய ஒருவர், இருவர் என நின்று துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் நாங்கள் ஏதோ தப்பிவிட்டோம். நல்லா இருக்கின்றோம் என்று சிந்திக்க வேண்டிய நேரமில்லை. எல்லோருமே கண்ணீர் விட வேண்டிய தருணமிது.

வெளிநாடுகளில் வாழ்கின்ற உறவுகள் கூட, தம் உறவுகள் எத்தனையோ பேரை இழந்து விட்டார்கள். கடல் கடந்து உழைக்க வேண்டும், திரவியம் தேட வேண்டும் என்று யாருக்காக போனார்களோ அவர்களை புலம்பெயர்ந்த எமது உறவுகள் இழந்து விட்டார்கள்.

எனவே இனி அனைவருமே தியாக சிந்தனையுடன் செயற்பட வேண்டும். இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று கூறிக் கொண்டிருப்பதை விடுத்து, உதவிக்கரம் நீட்ட அனைவரும் முன்வர வேண்டும் என்று அன்பாக கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை

வன்னிக்கு பொது அமைப்புக்களின் நிவாரணப் பொருட்கள் சென்றுள்ள போதிலும், மருந்துப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது என, நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் தெரிவித்தனர்.

